கணபதி துணை

குன்றக்குடி மிலை முழந்தருளி யிருக்கும்

சிவசுப்பிரமண்யக்கடவுள்

குறவஞ்சி.



இது

புகழேந்தி குலத்தில் அவதரித்த

குன்றக்குடித் திருவண்ணுமலை யாதீனம்

மகாவித்வான் வாணிதாச

வீரபத்திரக் கவிராயரவர்களால்

இயற்றப்பெற்று

டையார் பேளத்திரர்

வீரபத்திரக் கவிராயரால்

கும்பகோணம்

ஸ்ரீ ஹயவதன விலாஸ பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது. 1914வது



உ

கடவுள் துணை.

நூலாசிரியர்

சரித்திரச்சுருக்கம்.

பாண்டியதேசத்திலே இராமகாதபுரம் சமஸ்தானம் அபிராமமென்னு நகரிலே புகழேந்திப்புலவர் மரபில் வேளாளர் குலத்திலே சுமார் நாற்றைபது வருடங்கட்குமுன்னே அதிதீவிர புத்திசாதுரியமுள்ளவரும் ஏகசந்தைக்கிராகியங்களைக்கில் மிகபுனரும் பற்பல கிராமக்கணக்கர்களுக்குந் தலைமையுயுற்றவரும் ஓர் பெரிய அதிகாரிமுன் இவர் அத்தச் சித்திரகுப்தனே யாருமேன யாவரும் அதிசயிக்கும்படி யொரு வெள்ளேட்டைக் கையில்வைத்துப்பார்த்துக்கொண்டு பற்பல கிராமகணக்கைக் கொஞ்சமும் தவறன்றி வரசித்துக் கிர்த்தி பெற்றவருமாகிய அங்கப்பபிள்ளையென்பவ ரொருவரிருந்தார் அவர்முத்திருளாயியென்னுமோர்கன்னிகையைமணம்புரிந்து முறையேயில்லறதருமத்தைநடாத்தி இவ்விருவர்செய்யும் பூர்வபுண்ணியமே யோருருக்கொண்டவத்தன்ன புகழேந்திகுலதீபம்போ லோர்மகவைப்பயக்து அம்மகவைக்கு வீரபத்திரனென்ன காமகாணத்தரித்து ஐந்தாவதாண்டில் வித்யாப்பியாசஞ்செய்விக்க ஓதியுணர்ந்த தன்புத்ரனுக்குப் பிதா தம் உத்யோகத்துக்குத்தக்கவழிகளைக் கற்பிக்கவே யவைகளைக் கவனியாது பரம்பரையான வித்வத்தொழிலிலேயே தன்மனம் ஊக்கமாக இருப்பதையு கிகண்டுமுதலிய இலக்கியங்களைக் கற்பதையுங் கவிபாடுந் திறமையையுந் தக்கதையுற்றுணர்ந்து தன்மனைவியை யழைத்து இவனம்முடைய உத்யோகத்தொழிலுக்கு அருகனல்ல இவன் மனம் நம்முடைய பரம்பரையான வித்வத்தொழிலேயே காடிக்கொண்டிருப்பதால் இவனைப் புதுக்கோட்டைச்சமஸ்தானம் இராயபுரத்தில் நம்முடைய பந்துக்களில் சுப்பிரமண்யக்கவிராயரென்பவ ரொருவரி

ருக்கிறார். அவரிடமழைத்துக்கொண்டு போய் விடவேண்டு
மென்கிற எண்ணத்தையுரைத்துச் சிலகாலிருந்து இந்த அங்
கப்பிள்ளையென்பவருஞ் சிவபதவி யடைந்தனர். அப்பொ
ழுதிக்குழந்தைக்கு வயதொன்பதாயின.....
பின்னர் அவர் மனைவியாரும் அவ்வூரிற் சிலநாட்டங்கியிருந்து
கணவன் மொழிந்ததை கினைந்து தன்புதல்வனையழைத்துக்
கொண்டு சிவகங்கைமார்க்கமாக இராயபுரத்துக்கு வரும்வழி
யில் திருவுடையார்பட்டியென்னு மோர்ஊரின் குளத்தருகிற்
றங்கித் தத்தாபனமுதலியனசெய்து கட்டமுதருந்தின பிற்
பாடு ஓரிடத்திருந் திளைப்பாறிக்கொண்டிருந்தனர் அப்பால்வ்
வூரிற் றக்கசமுசாரியும் பெருந்தன்மையும் பரோபகாரியுமான
சூரியக்கோனென்பவன் வந்து நீங்கள்யார் எங்கிருந்து வருகி
றீர் எவ்வூர்க்குச்செல்கிறீரென இந்த அம்மாளுந் தன் குடும்ப
விருத்தாந்தங்களையும் இப்பொழுது தன் குழந்தையைத்
தானழைத்துச்செல்லு மெண்ணத்தையுந் தெரிவிக்கவே
யவைகளைக்கேட்ட சூரியக்கோனென்பவன் சொன்னதாவது
அம்மணீ யிந்தக் குழந்தைக்குப் படிப்பு ஏதேனும் வருமா
வென னன்முய் வாசிப்பா னென்றோர் சுவடியை யெடுத்துக்
கொடுத்து வாசிக்கச் செய்தனள் அதைக்கேட்ட சூரியக்கோ
னுஞ் சந்தோஷமடைந்து அம்மணீ யென்னுடைய குழந்தை
கள் பேரன்மார்க ளிருப்பதால் என்வீட்டைத் தங்கள் வீடு
போற் பாவித்து இக்குழந்தையைக் கொண்டு படிப்புச் சொல்
லிக்கொடுக்கலாமா வெனக்கேட்கவே இவ்விருவருமதற்குடன்
படிவதைச் சூரியக்கோனறிந்து தன்கூடவே யழைத்துச்
சென்று தனியாக இவர்க ளிருப்பதற்கு வீடொன்றமைத்துக்
கொடுக்க அவ்வீட்டிலிருந்து கொண்டு பிள்ளைகட்குப் போதி
க்கும் உபாத்திமைத் தொழில்புரிந்து வரும் நாளையி லோர்
நாள் குன்றுக்குடித் திருவண்ணுமலை யாதின மடாலயத்திற்
குருபூஜை காலஞ்சமீபித்த படியாலித்தச் சூரியக்கோனுக்கும்
அங்கிருந்து திருமுகம் வரவே வழக்கப் பிரகாரங் கொண்டு
போகும் பதார்த்தங்கள் யாவுஞ் சேகரித்து உபாத்தியாயரா
ய இக்குழந்தையையு மழைத்துக்கொண்டு போகும் வழி

யிற் குன்றக்குடியின வரலாறு சுவாமிபேர் தர்மகர்த்தாவாக இருக்கும் தம்பிரானவர்கள் பேர் முதலியவைகளைத் தன் உபாத்தியாயராகிய இக்குமுத்தைக்கு விபரமாகத் தெரிவித் துச்சென்று தர்மகர்த்தாவாக இருக்குவருஞ் சபாபதித்தம்பி ரானவர்களை வணங்கித் தான் கொண்டுபோன வரிசைகளை வைத்துக் கண்டுகொண்டனன்.

இதுகிற்கச் சூரியக்கோ னென்பவனை ஸ்ரீலஸ்ரீ தம்பிரான வர்கள் கோக்கி புன்னுடன் கூடவக்கிருக்கு மிக்தச் சிறுவன் யாரென்று வினவுக் தம்பிரானவர்கள் சொல்லி வாய்மூடி முன்னர் தன்னூர் பேர் தன்தந்தையின் வரலாறு தாயர் தன்னை யழைத்துக்கொண்டு வக்திருக்கும் காரணம் யாவும் எழுதாமலே போர் செய்யுளின திவிரைவா யமைத்துரைக்கக் கேட்ட தம்பிரானவர்க ளுள்ளத்தடங்கா மகிழ்ச்சி பொங்க ஆச்சரிய முடையராய்ச் சூரியக்கோனை நோக்கியிக்குமுத்தை கம்மிடமே யிருக்கட்டும் நீ போய்வாவென வேண்டிய மரி யாதை செய்தனுப்பவே யாதவ கிரேஷ்டனாகிய சூரியக்கோ னுக்குத் தன் உபாத்தியாயரை விட்டுப் பிரிய மனம் வராமல் வருத்தமுற்றவனுய்த் தம்பிரானவர்கள் கட்டளையை மீறி கட க்க முடியாதவனுகத் தன்னூர்க்குச் சென்றனன்.

பிறகு சூரியக்கோன் வீட்டிலிருக்த இவர் தாயாரையுக் தம்பிரானவர்களால் வரவழைத்து இவரையும் இவர் தாயா ரையும் இராயபுரத்துக்குச் சுப்பிரமண்யக் கவிராயரிடம் அனு ப்பினர் அது முதலிவர் பத்துக்களு மடத்துக்கு வரப்போக இருக்தனர் அக்காலத்தி லிவருக்கு வயது பன்னிரண்டா கும் இவர் சரஸ்வதி யனுக்கத்தா லெச்செய்யுளும் இடர்ப்ப டாமலே பாடுவதில் வல்லவர் இவர் திறமையைக் கண்டு மெச் சாதவ ருலகத்தி லொருவரு மில்லை இக்குமுத்தையின் செய் கையை வெண்பாப்புலிக் கவிராயர் கேள்வியுற்று இப்புவியி னம்மைவிட வேறொரு வனுமுளனே வெனச் செருக்கடைக்த வராய் ஸ்ரீல ஸ்ரீ தம்பிரானவர்க ளிருக்குமடத்துக்குள் வரக் கண்ட தம்பிரானவர்க ளுபசரிக்கவும் அவரை நோக்கி நீ சுபாபதி யிங்கோர் வித்வச்சிறுவன் வந்திருப்பதாகக் கேள்வி

ப்பட்டு வக்தனம் அவ னெங்கேயென்று வினவ வித்வா னிங்
கில்லை சகலமும் அவடக்தானென்று விடை கூறுவதை யறி
ந்த வெண்பாப்புலிக்கவிராயர் கோபங்கொண்டு அவ னெங்கி
ருக்தாலு மழைத்துவர வேண்டுமென்று போதை வெறியா
லுரைக்கவே யதைத் தம்பிரானவர்கள் கேட்டு அவன் சிறு
குழக்தை விளையாடப் போயிருப்பா னென அவனை கா மவசி
யம் பார்க்கவேண்டும் மறுக்கின் வசைபாடுவோ மென்றுரைக்
கக் கேட்ட தம்பிரா னவர்களு மக்குழக்தையை வரவழைத்
தருகில் விடவே யச்சிறுவனை வெண்பாப்புலி நோக்கி நீயாவித்
வானென அக்குழக்தையும் ஆம் நான்தான் வித்வானென்று
ரைக்க உனக்கென்ன பாடவரு மென்று வெண்பாப்புலிக்கவி
ராயர் வினவ அக்குழக்தையும் நானெவையும் பாடுவே
னென்று சற்றும் அஞ்சாமல் விடைகூறுவதை யறிந்து அகம்
பாவமேலிடவே சிறுபயலா யிம்மூன்றுஞ்செப்பு என்றோர் சம
ஸ்நியைச்சொல்லி நாமிந்த மயின்மலையைப் பிரதட்சணஞ்
செய்து வருவதற்குள் மூன் மூன்றடியு முடித்துச் சொல்வை
யாவென ஏன் அவ்வளவு தாமதம் இப்பொழுதே கேட்டுக்
கொண்டு போகலர்மேயெனப் பாடியவெண்பா,

அற்பனுக்குச் செய்கலமு மரணங்குக் குட்புல
மிப்புவியி னுன்பெரியோ னென்பவனு—மெய்ப்பாற்
றிவனுக்குக் கேடாகுமாராய்ந்து பார்க்கிற்
சிறுபயலா யிம்மூன்றுஞ்செப்பு.

எனவே சமஸ்நி முடிக்திருப்பதையும் அதி னமைக்திருக்கு
மூன்று வித விஷயங்களையுஞ் சொன்னயம் பொருணயங்களையு
மறிந்து நடுக்கிட்டு வெண்பாப்புலிக் கவிராயருக்கு மார்பில்
வேல்கொண்டு தைத்தது போற் றைத்து அச்சமு நானு
மதிகரிக்கத் தம்பிரானவர்களை நோக்கி யிவர்பே யாதென்ன
இவர் பேர் வீரபத்நிரனென்றுரைக்கக் கேட்ட வெண்பாப்
புலிக்கவிராயரும் நமது கெருவத்தை யடக்கும் பொருட்டு
அந்தச் சாஸ்வதியே யிவ்வுலகத்தி னிவ்வுருக்கொண்டு தான்
வக்தனரோ அல்ல திந்த மயூரகிரிக்கடவுளே இந்த வீரப்புலி
யைச் சிருஷ்டித்து நம்மைச் செயிக்கும்படி விடுத்தனரோ
யாதோ தெரிகிலேமென் றையுற்றவராய் நாம் வெறும்புலி

யிவர் வீரப்புலியானதர லிக்த வீரப்புலியிருக்குமிடத்துக்கு நாமுள்ளவரை யொருகாலுமனுகே மெனவும் இன்றுமுதலி வர்க்கு வாணிதாசனெனவும் வாக்களித்துச் சென்றனர்.

அன்றுமுதல் மயூரகிரிநாதர் பரிபூரணகிருபையாலே தம் பிரானவர்க ளபிமானம் பெற்று ஸ்ரீலஸ்ரீ திருமெஞ்ஞான பண் டாரசந்நியவர்களைத் தமிழாசிரியராகக் கொண்டு இலக்கிய இலக்கணங்களிலும் வேதாந்த சித்தாந்த சாஸ்திரங்களிலு மிக்க தேர்ச்சியும் இயலிசை நாடக மென்னு முத்தமிழிலும் பெரும்பாலும் அடைமொழியின்றி சுவசை மொழுகும்படி பாடுஞ் சாமர்த்தியமும் பண்டித பாமரர்களுக்கும் ரஞ்சன முண்டாகும்படி பிரசங்கிக்கும் வல்லபமு முள்ளவராயிருந்து இராயபுரத்திற் சுப்பிரமணியக்கவிராயர் புத்திரை விவாகம் புரிந்து குன்றுக்குடித் திருவண்ணமலை யாதின மடாலய வித் வான் வாணிதாச வீரபத்திரக் கவிராயரென்னப் பற்பல வித் வான்களும் புகழ்ந்துகூற வந்தவிருந்தினர்கட் கமுதுபுரிவித் தும் வரும்விருந்தை வழிபார்த்தலும் உடையராய்த் தமதில் லற விருத்தியை வழுவுதலின்றி நடாத்தி அகமகிழ உற வினர்புகழுத் தனகனக வஸ்துவாகனங்கள் பெருக வாழ்ந்து வருநாளையி லிவருக்கு வயது முப்பத்திரண்டாகும்.

அப்பொழுது ஸ்ரீல ஸ்ரீ சபாபதித் தம்பிரானவர்கள் வேலாயுதத்தம்பிரானவர்கள் மனோபிஷ்டப்பிரகாரம் இவ்வித் வசிரேஷ்டருந்திருவாரூர் மனுநீதிச்சோழன் றேரூர்ந்த சரித் திரமும் வள்ளிகல்யாண விலாசமும் பாடியும் பின்னர்குன்றுக் குடிச் சிவசுப்ரமணியக்கடவுள் பேரிற் றலிவன் பவனிவரவு, மகளிர்காமுறுதல், மோகினிவரவு, உலாப்போக்த தலிவனை க்கண்டு மயங்கல், திங்கள். தென்றன, முதலிய, உபாலம்ப னம் பாங்கியுற்றதென்னென வினவல், தலிவி பாங்கியோடுற் றது கூறல், பாங்கி தலிவனைப்பழித்துக் கூறல், தலிவி தலி வனைப் புகழ்ந்துகூறல், தலிவி பாங்கியைத் தூதுவேண்டல், தலிவி பாங்கியொடு தலிவனடையாளங்கூறல், குறத்தி வரவு தலிவி குறத்தியை மலிவனமுதலியன வினவல், குறத்தி மலி வள நாட்டுவள முதலியன கூறல், தலிவன் தலவளங் கிளை வள முதலியன கூறல், குறிசொல்லி வந்தமை கூறல் தலிவி

குறிவினவல், குறத்தி தெய்வம் பரவல், குறிதேர்ந்து கல் வரவு கூறல், தலைவி பரிசிலுதவி விடுத்தல், குறவன் வரவு புள் வரவு கூறல், கண்ணிகுத்தல், புட்படுத்தல், குறத்தியைக் காமுற்றுத்தேடல், குறவன் பாங்கனோடு குறத்தி யடையா ளங்கூறல், குறவன் குறத்தியைக் கண்ணுறல், குறவன்னனி முதலியன கண்டையுற்று வினவலும். ஆங்காங்குக் குறத்தி விடைகூறலு, மாகக் கூறல். முதலிய இவ்வகையுறுப் புக்களை யுடைய குறவஞ்சிப்பிரபந்தத்தைப்பாடி யரங்கேற்றி அதற் காக ஸ்ரீலஸ்ரீ சபாபதித்தம்பிரானவர்கள் வேலாயுதத்தம்பி ரானவர்களால் ஷெ தேவஸ்தானம் கிராமங் காட்டாத்தாங் குடியில் நாயகப்பிறப்பானென்னும் ஓர் சர்வமான்னிய கிராம த்தை விட்டுக்கொடுக்கப்பெற்றும் குதிரை பல்லக்கு சால்வை தோடாக்கள் முதலியன பரிசுவிக்கப்பெற்றும் ஐந்து கோயிற் றிருவிழாக்கட்டளைகளும் தினந்தோறுங் குன்றுக்குடிச் சிவ சுப்ரமணியக்கடவுள் கோவிற் பிரசாதங்களும் ஸ்தல மரியா தைகளும் கடைபெற்று வந்தன இன்றும் அம்முறையே கடை பெற்று வருகின்றன.

அஃதான்று விஸ்வகுல சிரேஷ்டர்களான கண்ணாளர் கள் தங்கள் சாதியார்பேரில் குலவஞ்சிப்பிரபந்தம் ஒன்று பாடவேண்டுமென்று கேட்கவே யவர்க ளபிஷ்டப்பிரகாரம் இவ்வித்வ சிகாமணியும் மாக்தைக்குறவஞ்சி யென்னுமோர் பிரபந்தத்தைச் செய்தரங்கேற்றி யன்னவர்கள் சிவிகை தொட்டுவரவே சிவிகையேறி ஊர்வலம் வந்தும் வருடந்தோ றுங் குடிக்கொருபணந்தருவதாகக் கூறுசாதனமுங் கொடுக் கப்பெற்றும் இன்னமும் அவர்களால் அநேக மரியாதைகளுந் தரப்பெற்றவர் இக்கவிராயரவர்களால் அநேக அருமையான நூல்கள் செய்திருப்பதிற் சிற்சில பிரபந்தங்கள் அக்னிபாதை யாற் றவறிப்போய் விட்டனவாகப் புலப்படுகின்றன.

இது சிற்க சமிவன க்ஷேத்திரமென்கிற கோவிலூரிற் றிருப்பணிபுரியுங்கம்மாளர்கள் தங்கள் குலத்தார்பேரிற் பாடி யிருக்கு மாக்தைக்குறவஞ்சிப்பிரபந்தத்தை மறுமுறை பிரசங் கித்துக்கேட்கவேண்டுமென்ற அவாவுற்றுத் தங்களெண்ணத் தை ஷெ கவிராயரவர்களுக்குத் தெரிவிக்கவே அதற்கவரு

மப்படியே செய்வோமென உடனே விஸ்வகுலோத்தமர்களும் ஆண்டவனென்கின்ற முத்துராமலிங்க சுவாமிகள் முன்பொருங்கெய்திச் சுவாமி குன்றுக்குடித் திருவண்ணமலையாதின மடாலய வித்வானவர்கள் எங்கள் குலத்தார்பேரில் மாத்தைக்குறவஞ்சி யென்னு மோர்பிரபந்தஞ் செய்திருக்கின்றனர். அதை மறுமுறை கேட்கவேண்டுமென்கின்ற எண்ணத்தை நாங்கள் கொண்டிருப்பதால் பரிசளித்தல் முதலியவற்றிற்கு ரூபாயிருநூறு வரையில் வேண்டுமானதால் கொடுக்கும்படி உத்தரவாகவேணுமென்று கேட்கவே அதற்கச்சுவாமிகளும் அவர்கள் கருத்துங்கிணங்காது மறுதலிக்க அப்பொழுது அச்சுவாமிகள் சமீபத்திலிருந்த வேறொருசுவாமியரிக்கண்ணுளர்களை நோக்கி நீங்கள் சொல்லுங் கவிராயர் வேதாந்தக் குறவஞ்சி பாடுவாரோவென அதற்கு அவர்கள் சொன்னதாவது இந்தக்கவிராயரவர்கள் எந்தச்சாஸ்திரங்களிலும் வல்லரானதால் தாங்களிப்போது சொன்ன வேதாந்தக் குறவஞ்சியும் பாடுவாரென்றுரைக்கக் கற்றுப் புராணிகரைச் செய்வாரேயன்றி வேதாந்த சாஸ்திரங்களெவ்விதம் வரும் நீங்கள் சொல்வதீ சுத்தப்பிசகுகத்தவனத்தாண்டிக்கும் முசல்வேட்டைக்கும் ஒவ்வுமாவென்றி கழ்ச்சியாகப் பேசுவதையெல்லாம் கண்ணுளர்களாலிக்கவிராயரவர்கள் கேட்டறிந்து உடனே பாடியனுப்பிய செய்யுள்.

தொகுத்தமறை கடந்தமெய் நூலுணர்வறியா வுயிர்கள்பவத்
தொடக்கு நீங்க
மிகுத்தகல்வி யுயர்த்துமுத்து ராமலிங்க தேசிகர்மென் முக
ங்கண் டேகி
அகத்தியன்கா லகத்திருந்தான் வாணியுந்தர மரையகமே
யார்ந்தான் வேதன்
வகுத்திடுகத் தொழிலினியே தென்றுதன்தை யுந்தியினுள்
வகிக்கின் றானே.

என்னுமோர்செய்யுளைப் பாடியனுப்பவே யச்செய்யுளை ஆண்டவராகிய சுவாமிகள் வாங்கிப்பார்த்து வித்வான்கள் போற்றினும் போற்றுவர் பொருள் கொடாவிடிற் றூற்றினுந் தூற்றுவ ரானதரலிக்கவியின் மற்றதெல்லாஞ் [illegible]

ந்த மெய்நூ லென்றிருப்பது பெருங்குற்றமாகு மென்றுசைக்
கக் கேட்ட கம்மிய அமிஞர்கள் தேசிகரைப்பார்த்து இக்கவி
ராயர் மகாவித்வானுனதா லிவர்கவியிற் சிறிதுங்குற்றமிராது.
ஏதோ அந்தஇடத்தில் வினயமாக இருக்கலாம் அவரை யிவ்
விடம் அழைத்துவருகிறேமெனவே அதற்குச் சுவாமிகளும்
அவர் வித்வானுக இருப்பதா லிதற்காக வரவழைப்பது மரி
யாதையல்ல கோவிலுக்குச் சுவாமிதரிசனத்துக்கு அவர் ஒரு
வாறு வந்தாலும்வாக்கூடும் அக்காலத்திற் சந்தித்துக்கொள்
ளுவோமெனவே யிச்சமாசாரங்களை யெல்லாம் கம்மியர்களா
லுணர்ந்த அப்புலவர் சிகாமணியும் அன்றிரவிற் கோவிலுக்கு
சுவாமிதரிசனத்துக்குச் சென்றனர் அக்காலையி லாண்டவரா
கிய தேசிகரும் கோவிலுக்குவரவே இருவருஞ் சந்தித்துக்
கவிராயரவர்களுக்குக் கிரமப்படி கோவிலில் நடத்தவேண்டிய
மரியாதைகளு நடப்பித்துச் சுவாமிகளும் கவிராயரவர்களும்
அங்கோரிடத்திருக்கக் கவிராயரவர்கள் வேதாந்தசாஸ்திரப்
பிரசங்கஞ்செய்ய அதனைக்கேட்டசுவாமிகளு மற்றோரும் பிர்
ம்மானந்தபரவசமுள்ளவராகி யிருக்க மறைகடந்த மெய்நூ
லென்றிருப்பதிற் குற்றமுரைத்த சுவாமிகளுக்கு மறைகள்
தந்த மெய்நூலென் றெடுத்துக்காட்டிச் சமாதானஞ்செய்
யவே தேசிகரு மனமகிழ்ந்து மிகமிகப்புகழ்ந்து கம்மியர் கரு
த்தின்படி இருநூறுரூபா யளித்துத் தமதுமுன்னிலையில் மாக்
தைக்குரவஞ்சிப் பிரபந்தத்தைப் பிரசங்கிக்கக்கேட்டுக் கவி
ராயரவர்களுக்கு தாமும் மரியாதை செய்தனுப்பினர்,

பின்போர்காள் தொண்டமான் புதுக்கோட்டைச் சமஸ்
தானத்தை யரசுபுரிகின்ற மகாராஜர் அவர்களிடஞ்சென்று
அனேக தமிழ்வித்வான்களுக்குள் இவர் முதலாவது சம்பா
வனை தரப்பெற்றவர் விப்பிரகுலத்திற் றோன்றிய ஓர்வித்
வான் தக்கசன்மானம் பெறவேண்டுமென்கின்ற அவாவுடனே
வந்து ஷே சமஸ்தானங்கார்பார் தானப்பிள்ளையைக்கண்டு
தங்கள் பேரிலோர் அஷ்டகாகபக்கவி பாடிக்கொண்டு வ
ந்திருக்கிறேனெனத் தெரிவிக்கவே யவ்வார்த்தையை யப்பிள்
ளையுங்கேட்டு அது பாடுகிறதாக இருந்தால் எவ்வளவு காலை
யிற் பாடி முடியுமெனக்கேட்க அப்பிராமணனும் ஆறுமாதஞ்

செல்லுமென அப்படியானால் வித்வான்களையும் வைத்துக் கொண்டு மேற்படி கவியைக்கேட்கவேண்டுமென்கின்ற எண்ணமுள்ளவராயிருக்கையில் குன்றக்குடியிலிருக்கும் திருவண்ணாமலையாதீன மடத்து வித்வானுகிய இவ்வீரபத்திரக்கவிராயரும் ஏதோகாரியார்த்தமாகப் புதுக்கோட்டைக்கு வந்தவர் இந்தத் தானப்பிள்ளையைக்கண்டு பேசிக்கொண்டுபோகவேண்டுமென்கின்ற எண்ணங்கொண்டு இவர் பிரகதத்துக்குவரவே பிள்ளையுங்கவிராயரை யுபசரித்திருக்கச் செய்து ஐயா, அஷ்டாகரகபந்தம் பாடுகிறதாக இருந்தால் எத்தனை மாஸ்தைக்குப் பாடலாமென கவிராயரும் அதென்ன மாதக்கணக்காவேண்டும் இப்பொழுதே பாடலாமென பிள்ளையும் அது எவ்விதம் பாடக்கூடும் அஷ்டகாகபந்தம் பாடுவது சிரமமல்லவாளன கவிராயரும் சிரமமுள்ளவர்களுக்குச் சிரமந்தானென்று உடனே யைந்து நிமிஷத்துக்குள் மேற்படி அஷ்டகாகபந்தம் பாடி முடித்துக் காட்டவேதானப்பபிள்ளையும் வியந்து பிராமணனே வாவழைத்து இந்தச்சமாசாரங்கள் முழுவதுஞ்சொல்லி உபாயமாகச் சன்மானஞ்செய்ய அதனை யப்பிராமணன் வாங்காது கோபமுடனே தன்னூர்க்குவந்து அவ்வந்தணன் மந்திரவாதியானதால் மந்திரத்தால் ஓர்சர்ப்பத்தை யிக்கவிராயர்பேரில் விடுப்ப அத்தச்சர்ப்பமானது வந்து இவர் நிராபாதியானதாலிவரைத்தீண்டுதற்கஞ்சி யிவரெங்குசென்றாலும் எங்கிருந்தாலும் எந்த இடத்திற்படித்திருந்தாலும் இவர் கண்களுக்கு மாத்திரம் புலப்படுகிறதேயல்லாமல் வேறில்லை இதைக்கண்டு அச்சமேலிடக் கவிராயரு மிக்க கவலையடைந்து நாளுக்குநாள் தேகமெலிந்துகொண்டு வர இவரும் ஸ்ரீமயூரகிரிவாசகராகிய சுப்பிரமண்யக்கடவுண்மீது அனேக கவிகளைப்பாடவே யடியார் குறைகளைத்தீர்த்து அவரவர் மனோரிஷ்டத்தை நிறைவேற்றி யாதரிக்கும் பரமகருணாநிதியாகிய முருகக்கடவுள் மனமிரங்கிச் சொப்பனத்திலோர் பெரியவர் போலச்சென்று, ஏ கவிஞ இக்கொடிய சர்ப்பம் உன்னை விட்டகன்றுவிடும் நீயொன்றுக்கும் கவலைப்படவேண்டாம். இதுமுதற்கொண்டு நீகாஷாயவஸ்திர தாரணஞ்செய்துகொள்ளென்றுரைத்து மறைத்தருளினர் அப்பொழுதி

விழித்துப்பார்த்துச் சொப்பனத்தி லருளிச்செய்ததை நினை
த்து நினைத்து உள்ளத்தடங்காத மகிழ்ச்சியைக் கொண்டவ
ராக இருந்தாலும் ராஜகுமாரியாக இருப்பதால் எவ்விதம்
காஷாயக் தரித்துக்கொள்வதென் றையுற்றவராய் மீண்டும்
அம்முருகப்பிரான்மீது கவிகளோப்பாடுவதாயினர் அக்கடவுள்
சர்வஜீவ தயாபரமூர்த்தியாகையால் கவிராயர்மீது பிறகும்
கருணைகூர்ந்து குன்றுக்குடியில் வசிக்குந் திருவண்ணாமலையா
தின தர்மகர்த்தாவாகிய ஸ்ரீலஸ்ரீ வேலாயுதத்தம்பிரானவர்
கள் பாற் கனவிற்சென்று நமதன்பனே உன் ஆதினமடத்துக்
கவிஞனுக்கு இப்பொழுது கோர்த்திருக்கு மிடையூறுநீங்கவே
ண்டி காம் அவன் கனவிற் சென்று அவனைக்காஷாயவஸ்திர
தாரணஞ் செய்துகொள்ளும்படி தெரிவித்தோம் அதற்கவன்
கான் குடும்பியான தா லெவ்விதமிக்காரியத்தைச் செய்வதெ
ன்று உடன்படாமலிருக்கிறதுத்தவிர கம்மையும் பாடுகிறான்.
ஆனதால் நீயாவது காஷாயவஸ்திரத்தை அவனுக்களித்து
தரித்துக்கொள்ளும்படி செய்வாயெனத் தெரிவித்து உடனே
மறைந்தருளினர். அப்பால் ஸ்ரீலஸ்ரீ தம்பிரானவர்கள் கித்
திரைவிட்டெழுந்து சொப்பனத்திற் கண்டதைக் கருதிப்
பேருவகையுற்றவராய்க் கவிராயர் வரவை யெதிர்நோக்கியிரு
ந்தனர். அப்பாற் கவிராயரும் மடத்துக்கு வரவே தம்பிரா
னவர்களிவரைநோக்கி இது சுவாமி உத்தரவென்று காஷாய
வஸ்திரத்தை யெடுத்துத்தமது திருக்காத்தாற் கவிராயர்
கையிற்கொடுக்க யாதொரு தடையுஞ்சொல்லாமல் கவிராயர்
தமதிருகரத்தால் வாங்கித்தரித்துக்கொண்டனர் அப்பொழு
திவருக்கு வயது அறுபதுக்குமேலாகும் இவர்க்கு புத்திரர்
கள் சபாபதிக்கவிராயர் முத்துசாமிக்கவிராயர் என இருவ
ரிருந்தனர் இவர்களில் இளையகுமாரர் முத்துச்சாமிக்கவிராயர்
காஷாயவஸ்திரதாரணஞ்செய்துகொண்டவர்.

ஒர் கான் திருக்கோளக்குடியில் திருக்கோளகாதர் உற்
சவத்திற்குப்போனகாலத்தில் அன்று நினம் சுவாமி குதிரை
வாகனத்திலும் அம்பிலை அன்னவாகனத்திலும் எழுந்த
ருளி வரவே இத்திருக்கோலம் அமைக்கிட ஓர் செய்யுள் பாட
வேண்டுமென்று இவரை கேட்டுக் அவன் வக்கமறையித்

வான்கள் வேண்டிக்கொள்ள உடனே பாடிய செய்யுள்

பூவுடையார் தழுவுமணிப்புயமுடையா ரமரர்களும் போற்றப்
பூவி
லுவுடையானன் பருக்காயனஞ்சுமக்து வரப்பரிவுற் றருளி
னேக்கிச்
சேவுடையார் கனமதிச்சிரமுடையார் திருக்கோளகாதர்
தாமும்
மாவுடையாராய்ப் பணியாரமுஞ்சுமக்து வீதியினில் வருகின்
றாரே.

எனப்பாடவும் யாவரும் உவகை கூர்ந்தனர்.

ஒருகாலத்தில் ஒரு வருடம் மழையில்லாமல் காடெங்கும் பஞ்சமாக இருந்ததால் ஸ்ரீலஸ்ரீ வேலாயுதத்தம்பிரானவர்கள் தமது ஸ்ரீமகுடிக ளடையுர்துன்பத்தைச் சகிக்காமல் மேற்படி தம்பிரானவர்களும் மடத்து உத்தியோகஸ்தர்களும் இக்கவிராயர் சகிதம் காட்டாத்தங்குடி சென்று ஷ்ரீ ராம தேவதையாகிய பொய்சொல்லாமெய்யரென்னும் ஐயனுருக்கு அபிஷேகாதிகள் செய்வித்து பிராமணபோஜனமுகடாத்தி தம்பிரானவர்களும் இக்கவிராயரை அழைத்து மழைபெய்யும்படி தங்கள்வாக்கினால் ஓர் கவிசொல்லவேண்டுமெனப் பாடியகவி

வேண்பா.

தருணமிது வாகுர்தான் மாரிபெய்யக்
கருணைசெய்யாதிருக்கலாமா—வருணனிடம்
நீருரைத்துப் பொய்சொலா மெய்யரே யிக்கிமிடம்
மாரிபெய்யச்செய்வீர் வரம்

என்று ஓர் கவி கவிராயரவர்கள் வாக்கினாற்பாடவுமே உடனே ஆகாயத்தில் மேகங்களெல்லாக் திரண்டி கருத்து மின்னல் குமுறவுண்டாகி ஆறுமாதஜெலங்காணும்படியாக மழையைப்பெய்தன இதைக்கண்ட ஸ்ரீலஸ்ரீ தம்பிரானவர்களும் அதிசயித்து உள்ளத்தின் மகிழ்ச்சி பொங்கக் கவிராயரவர்களுக்கு மகாகண்டி சால்வை தோடா முதலிய பரிசளித்து யாவருமாகுன்றுக்குடியை வந்தடைந்தனர். காடெல்லாம் க்ஷாமநீங்கி க்ஷேமகரமுண்டாயின. இப்பெற்றிய பலவற்புதச்செயல் செய்துகொண்டிருந்த கவிராயரவர்கள் தமது 76-ம் ஆண்டில் சிவபதமடைந்தனர்.

சரித்திரம் முற்றுப்பெற்றது.

சிவமயம்

சிறப்புப்பாயிரங்கள்

இஃது

காஞ்சிக் குடியிலிருக்கும் மழவை சிதம்பரபாரதியவர்களியற்றியது.

செய்யகுன் றைப்பதிவாழ் செவ்வேள் குறவஞ்சித்
தெய்யதமிழ் நாடகத்தைச் சொல்லினன்— வையமகிழ்
வீரபத்ர சக்க விஜைசெய் யரக்கனைவெல்
வீரபத்ர சக்கவிஞ னே.

இஃது

ஷையார் கனிஷ்டபுத்திரர் இராமஸ்வாமிஐயரவர்க ளியற்றியது

மாவள மோங்கு மதுரைமா நகரைத்
தாவள மாகத் தனிவீற் றிருக்கும்
எக்காட் டினுமுயர் தென்ஞ டெனப்பெயர்
பன்னுட் கொண்ட பாண்டிகன் ஞட்டுட்
டிகிரியிற் குலவுஞ் சிகண்டிமால் வரையும்
பகர்தரு மதுகதி பாய்ந்துசெல் விளையு
நிலவள நீர்வள நிறைபல வளங்களு
கலமிகு நியம காட்டினிற் சிச்சால்
குன்றுக் குடியாய்க் குலமுயர்ந் தோங்கக்
குன்றுக் குடியுறுங் குமரன் மீது
பண்ணமை பத்தி பரவுசற் பாத்திரன்
கண்ணிய மோங்கு கங்கா கோத்திரன்
சார்ந்தெவ் வுலகுந் தழைக்கு மெய்ப்புக
ழேந்தி வங்ஷத் நினிதுற வுதித்தோன்
வெண்பாப் புலிக்கவி வினவுஞ் சமஸ்தியைப்

பண்பாய்ப் பாடிப் பரிசுற வென்றவன்
ஒருக்கரன் மழைபிலர் அலகைத் தவிக்கக்
கருக்கொடு மழைவரக் கவியுரைத் திட்டே
பஞ்சலட் சணங்களைப் பறக்கிட வடித்துப்
பஞ்சலட் சணங்களைப் பழுதறக் கற்றோன்
புதுவைமன் னவன்பாற் போந்துயர் வித்வ
சதசுமுன் மரியா தையும்பெறு நீரான்
பாணியிற் பொருத்தும் வீணையிற் றிருத்தி
மலர்வாணி தாச னலவர்க ணேசன்
விண்ணு ரமரர் விருமபித் தொழுந்திரு
வண்ணு மலையா தீனம டாலய
வித்துவான் வீர பத்திரக் கவிஞன்
கண்டொடி கனியோ கரும்பினி ரத்தமோ
அண்டர்க் கமுதோ வமைந்தபா கோவெனச்
செஞ்சொற் றிகழ்குற வஞ்சித் தமிழைப்
பாடினன் பாடிப் பலகவிவாணர்
கூடிய சபையார் குகன்சக் திதியி
னரங்கேற் றவு கல் வரங்கள்பா லிப்ப
உத்தமன் வேலாயுதமுனி யுடனே
சத்திய வான்குமர் தாபுரிக் கரசும்
மனமகிழ்க் தினிதின் வழங்குவாம் பரியங்
கனகதண் டிகையுங் கைக்கணையாழியு
மகர கண்டியும் வயிரக் கடுக்கனும்
பகரும் பீதாம் பர்ச்தோ டாவும்
வழாதைத்து கோயின் விழாக்கட் டலைகளும்
என்று மதியு மிலங்குகாட் கரமும்
என்று மழியா திருக்திடி வளஞ்சேர்
நிறப்பார் காயகப் பிறப்பா னேத்தற்
றூனியம் விளக்து தழைக்குஞ் சர்வ
மானிய மும்பலவரிசையும் பெற்றோன்
தன்குலத் தலிமை சாலவான் கவிஞர்
மன்குல மணியென மருவினன் மாதோ.

இஃது

ஷை சிதம்பரபாரதியவர்கள் பௌத்திரரும்
அஷ்டாவதானம் மீனாட்சி சுந்தரமய்யரவர்கள்
புத்திரருமான சிதம்பரய்யரவர்க ளியற்றியது

குறவஞ்சி நூலிக் குலப்புலவ ரும்பாற்
குறவஞ்சி யேதலிகள் கோட்ட —வறைந்தனனற்
புத்தமுதோ வென்னமயிற் பூதரவேண் மேல்வீர
பத்ரகவி தாசர பமே.

இஃது

ஷை யூர்சதாவதானம் வாலசுப்ரமணய ஐயரவர்கள்
இயற்றியது.

வெண்பா.

பதமார் குறவஞ்சிப் பாவைபங்கற் கென்றும்
பதமார் குறவஞ்சிப் பாவி— லிதமாமென்
றுய்த்தமைத்தா னண்ணன்பே ராதரித்த தாற்குன்றை
வாய்த்த கவி வீரபத்ர மால்.

இஃது

ஷையார் கனிஷ்டர் சாமிநாத ஐயரவர்களியற்றியது

குறவஞ்சி கொண்கனூர் குன்றுக் குடியான்
குறவஞ்சி மேற்காதல் கொள்ள— முறைசொற்றுன்
சேணிற்செல் வாக்காற் செழிக்குநீர் பார்க்குதவும்
வாணிதாச வீரபத்ர மால்.

இஃது

தேவை ஸ்ரீவன்றொண்டர் மாணாக்கருள்
ஒருவராகிய காளைக்குடி ராம-சு-ராம
சொக்கலிங்கச்செட்டியாரவர்க ளியற்றியது.

புறவஞ் சிவக்த மலர்வாவி மாட்டுமுற் போக்குசம
றவஞ்சி வக்தரு மாபூர வெற்ப னகமகிழ
றவஞ்சி வக்தீண செய்தோ டியல்புற வற்றமிழாற்
றுவஞ்சி வக்தறைக் தான்வீர புத்திரக் கூர்ங்கவியே.

இஃது

இராயபுரத்திலிருக்கும் மழவைத் திருவிசோயாடற்

சுப்ரமண்யபாரதியவர்கள் புத்ரர்

இராமசுவாமி ஐயரவர்களியற்றியது.

கார்படி வடிவாய்க் கைக்கோ டணிக்து
மேர்பெறு திகிரியு மேக்தி யெத் திசையுங்
காண்குற வாய்க்த கமலமா விழியுஞ்
சேண்படு பொன்னகஞ் செறிக்துமா தங்க
வம்பாப் போர்வை யணிபெற விசைக்து
மும்பர்மா னிகரா யோங்கிய மயூர
கிரிமினெஞ் ஞான்றுங் கேள்கிளர் வேலணிக்
தரியமர வரங்க ளன்பருக் கருள்வோன்
அற்புத லீலைக் ளாங்காங்கியற்றி
விற்பன விவேகியர் மெய்யகத் திருப்போன்
தேவரு மோவருஞ் செய்யு முத் தொழின்
மூவிருவ் காணு முதல்வ னேர்குற
வஞ்சிக் கவாவுறும் வலியுணர்க் தேகுற
வஞ்சிப்ப பக்தம் வகுத்தன னேர்காள்
வெண்பாப் புலிக்கவி விளம்புஞ் சமஸ்தியைப்
பண்பாய் முடித்த பாரபல்ய வாக்கி
மழைவளங் குன்றி மன்னுயிர் வாடித்
தழைபயிர் சாம்பித் தரித்திடாக் காலத்
தாங்குயர் மாரி யழைத்த மோர்பாவாற்
பாங்கெலா வளமும் பரப்பிய வாகவி
தளவ கைதந்திருத் தமூலம்பொன்னி காடான்
வளவர்கோன் வாயில் வரும்புக ழேக்கிப்
புலவர் பாம்பரை பொலிக்கிடத் தோன்றித்
தலைமைசேர் வாணி தாச வீர
பத்திரக் கவியெனும் பாவலர் சொமணிச்
சித்திர காமச் சிர்த்திபெற் ரோனே

இஃது

டையூரிலிருக்கும் இந்நூலாசிரியர் பௌத்திரர்

வீரபத்திரக்கவிராயர் இயற்றியவை

தேன்பாய மலர்செறியக் கொண்டலியுந் தண்டலையுஞ் செழி
க்க வோங்கி, வான்பாயுஞ் செல்வழிப்பண் பாடிமது கரம்
பாயும் வழியின் வேயிற், கூன்பாயு மக்கிகள்வே ழம்பரிற்பா
ய் தண்டலையுங் குரவை யார்ப்பான், மீன்பாயுந் தாமரையு
மேற்பாயுங் கழனிகளு மிக்கபாண்டி. (1)

என்னுட்டிட் கற்றதனு லாயபயன் கூட்டுண்ணு மெழினு வல்
லோர், பொன்னுட்டும் புகழ்நாட்டு கேமகன் னுட்டிடைய பு
னிதன் குன்றை, மன்னுட்டுத் தோகைமயிற் கிரிமருவுஞ் ச
ண்முகவேள் வரமன் பர்க்குப், பன்னுட்டுன் புறலகற்றி யா
ண்டருளெங்குமர குரு பரன்மீ தன்பால். (2)

குறுமுனி கேர் புகழேந்தி வழித்தோன்ற லுயர்க்கங்கா குல
த்தில் வந்தோன், சிறுபயலா யிம்மூன்றுஞ் செப்பெனுமீற்
றடிகொடுபா முடியத் தேர்ந்தே, தறுகணிறு மாப்புறும்
வெண் பாப்புலி கண் பாப்புலியே தாழவைத்தோன், மறு
வறுமைத் திலக்கணமொ டிலக்கியமும் வழுவறக்கற் றுணர்
ந்தமான் பன் (3)

அருணகிரி யாதீனத் தேவசிகா மணிக்குருவி னருளா லுற்ற
வான்முறையின் வந்தசபா பதிமுனி வே லாயுதமா முனிநா
ட் டோட்டே, பிரபலமார் தருமைந்து கோயில்விமாக்க
ட்டளைகள் பிசகா வண்ணஞ், சருவமா னியங்குறைசி வி
கைமுதற் பலவரிசை தரப்பெற் றிட்டோன். (4)

சொல்யாழின் னிசைகருங்கட் பிணைமருங்கு லிமைசாயற்றே
கை வள்ளி, கல்யாண மனுகூலச் சோமன்றே ரூர்சரிதங் கனி
செக் தேனிற், பல்யாணர் புகழ்மாக்தைக் குறவஞ்சி முதலிய
நூல் பகர்ந்தோன் ரூன, மல்யாணை வெங்கலமாக் கடைபுரு
க்தர லெனப்பசங்க மதுர வாக்கியன். (5)

திரணமும்வான் முளியின்றீ வளர்குன்றப் பயிர்வாடுஞ் செய
ல்கண் டின்னேன், தருணமிது வாமெனவோர் கவியுரைப்ப
மழைபொழிந்து தழையச்செய்தோன், கருணிகர்தம் முதல்
வனெனவெள்ளேடொன் றீகைக்கொண்டோர் கழக முன்ன
ருமையுறப் பற்பலகி ராமவா ரிக்கணக்கை யறையக்கண்
டோர். (6)

சித்திரகுப் தனுமிவனே யெனச்சொல்லி யதிசயிக்குக் திற
மை பூண்ட. வுத்தமசற் குணக்திகழங் கப்பவள்ளல் செய்த
வத்தர வுதவுஞ் செல்வப், புத்திரனு மலர்வாணி தாசனெ
னப் பூவுலகிற் பொருத்தும் வீர, பத்திரகவி ராசனுயர் குறவ
ஞ்சித் தமிழதனைப் பாடினனுல். (7)

இஃது

குன்றக்குடியிலிருக்கும் அப்பாப்பிள்ளையென்று
பெயர்வழங்கும்சாமிநாத பிள்ளையவர்க ளியற்றியது.

மாகுன்றை வாணருக்கு மன்னுகுற வஞ்சியின்ப
மேகுன்று தென்ன விரித்துரைத்தான்— பாகமுறு
மிக்க கலை வாணி மேவுருவாம் வீரபத்ர
தக்ககவி ஞன்னறிந்தே தான்.

இஃது

திருநெல்வேலிவண்ணர்பேட்டை பண்டித ஸ்ரீ
சுந்தரமூர்த்திபௌராணிகரவர்கள்
இயற்றியது

பொன்மணக்கு முயர்குன்றுக் குடிவாழ்சுப் பிரமணியப் புத்
தேட் கென்று, சொன்மணக்கும் குறவஞ்சிப்பாமாலை வெவ்
வழுகுக் அன்றத் தந்தான், கன்மணக்கு மக்குன்றுக் குடியி
ல்வரு கவிஞர்மணி கனிந்து பாவின், மின்மணக்கு முயர்வீர
பத்திரமாக் கவிஞனெனு மேலோன் றூனே.

இஃது

மூவல் ப. சிங்கா வேற்பிள்ளையவர்களியற்றியவை.

பொன்மருவு மாலினை ஞலவாத மாதவத்தார் புதல்வி யாகுங், கன்மருவு கன்னியினும் சென்னிமதிப் பெருமானெங் கருத்துளென்று, மன்மருவு மைமுகனு லுமுகனு லாசாள வையமாகித், தென்மருவு பாண்டிகன் னுடதனு ளபிராமத் திருவு சொன்னும். (1)

அகமேக்கியி ன்னுயிர்க்குக் காவல் புரியங்ஙகரி னமுதப்பா வோன், புகமேக்தி யென்னவரும் புகமேக்தி யவன்மாபு பொலிந்து தோன்றத், திகமேக்து கங்கைகுல வங்கப்பக் குரிசில்செய் திறத்த தாகும், புகமேக்து புண்ணியத்தின் ப யனெத்துப் புவித்தலத்தோர் போற்ற வந்தோன். (2)

புவிக்கினிய நற்குணமா மெக்குணமுந் தனக்கென்னப் பொ றுக்கு மேலோன், கவிக்கினிய நாவலன்ச பாபதிமுத் துச்சாமிக் கவிஞ ராகச், சவிக்கினிய கண்ணிரண்டே யெனப்பு தல்வ ரிருவரையுந் தக்து வாழ்ந்தோன், செவிக்கினிய சமய கவி மழைபொழியு மதுவென்னத் தெளியச்சொல்வோன்.(3)

குலமருவு மருணகிரி யாதீன முனிவர்வாழ் குன்றை யூராக் தலமருவு கவிஞனு யுலகன்பு மின்புயிவை தழைபே ரின்ப நலமருவ வெனத்துணிந்து முருகனடிக் கவிபுனைந்து கலகற் றாசவ், வலனருளால் வரப்புனைய துறவடைந்து கல்லினை க்கமருவக் கண்டோன். (4)

கற்புடைய நிருநிறத்த ரெனக்கூற மதியாது கட்மை மாதர் கற்புடைமை கடவாரேன் மழையேவல் செய்யுமெ னுங் கவிஞர் காண, வெற்புடைய வேல்விடுத்த காயகனை யுட்கொளீஇ விளங்க யாரும், பொற்புடைய சொற்கவியி னன்மழையை வளமருவப் பொழிவித் தானல். (5)

குறவஞ்சி யணைந்தருளிக் குறைதீர்க்குங் குன்றைகைகர்க்கும
ரனுக்குக் குறவஞ்சி கூறியிட்டான் கவியஞ்சிப் புலவோர்தங்
குறையிலா வாய், நிறவஞ்சி வாழ்த்திடவிம் மண்ணுலகும்
விண்ணுலகுஞ்செம்மை யாய,அறவஞ்சி வழுத்திடுகல் வீரப
த்திரக்கவிஞன் சொல்வோர்வாழி. (6)

இஃது

சிவகிரிமகாலிங்கப்புலவரவர்களியற்றியது

காள்விரிபூ முகத்தினிரு வல்லிபுல்லுங் கதம்பன்மயி ஞைக ம
ன்னும், வேள்விசய வேலவன்மேற் குறவஞ்சி விதியகத்தன்
வேலை யுண்டோன், வாள்விரவி ரவியுமெச்சப் புலவர்களுக்
கின்னமுதாய் மருவச் சொற்றான், கேள்வியினு லுயர்வீர
பத்ரகவிச் சரபமெனக் கிளத்து வோனே.

சிவகெங்கை இராமாயணப்பிரசங்கம்
அரு மூத்துக்கிர்ஷ்ணபிள்ளை யவர்கள் மாணக்கரும்
ஷையூர் சவுளிக்கடை
வேள்ளாச்சாமிசேருவைகாரருமான
பெரியசாமிசேருவைகாரவர்களாலியற்றியது

சுறவஞ்சி யொதுங்குக் துய சுனைதொடர் புனத்தின் வள்
ளிக், குறவஞ்சி கொழுகன் குன்றுக் குடியமர் குமுகன்மீது
றவஞ்சி தறும்பூக் தாரோன் கறுவமு தென்னச் சொற்றான்
குறவஞ்சி யதனைவீரபத்திரக் குரிசின் மாதோ,

ஷையூர் சவுளிக்கடை ஆதிமூலம்பிள்ளை,
அவர்கள் குமாரர்
காத்தய்யாபிள்ளையவர்களியற்றியது

புறவஞ்சி மிட்டசனத் தனங்கை காக்தட்
பூவபரஞ் சியையொத்துப் பொலியு மேனிக்
குறவஞ்சிக் கொடிபடர்கொம் பாகும் குன்றுக்
குடிவேண்மே லுவரியினைக் குடித்தோ னும்பா
ருறவஞ்சி மலியிறங்கா துறைவோ காமென்
றுணருமிய லுறும்வீர பத்ரதான்
குறவஞ்சிப் பிரபந்த வமுதைத் தந்திக்
குவலயத்துப் புலவருண்ணக் கொடுத்திட்டானால்

கணபதி துணை.

குன்றக்குடி சிவசுப்ரமண்யக்கடவுள் பேரில்

குறவஞ்சி.

தோகையடி விநாயகர் காப்பு

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பூதலமெ லாம்புகழும் பூதரத்தி லுயர்சிகண்டிப் பொருப்பில் வாழு
நாதரெனுங் குமரகுரு பரன்மீதிற் குறவஞ்சி நவிலக் கங்கை
சீதமதி யரவிதழித் தொடையணியுஞ் செஞ்சடிலச் சிவனு ரீன்ற
காதலனுந் தோகையடிக் கணபதிபங் கயமலர்த்தான் காப்ப தாமே

பரமசிவவணக்கம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

மேடமணு கிடபமுற்றூன் மிதுன பாணி
மிசைகடகம் பூண்டுசிங்க மீநூர்கன்னி
யோதுதுலா நிறையியனப்பல் லுயிர்க்கு ளோங்கி
யெளளிவீருச்சிகந்தலக்கியுலவு திங்கட்
சூடியைம்பூ வைக்கருப்புத் தனுசி லாரத்
தொடுமகரத்தனையெரித்தோன் றுணைத்தாள் போற்றி
நாடுதும்ப முலைமீகைக் கண்ணி வள்ளி
நாதர்குன்றைக் குறவஞ்சி நவில்வின் றேனே.

நாமகள்வணக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

புதியமல ரொழுகியதே னதிவழியாய்ப் பழனமதிற் புகுந்து செங்கேற்
கதிரின்முத்த மதியெனவுங் கதிமேம நாட்டுயர்சி கண்டி வெற்பின்
அதிபதியாங் குமரகுரு பரன்மீதிற் குறவஞ்சி யதனைச் சாற்ற
விதிதிருநா வுரைதருபா ரதிபதமென் னிதயமலர் மிசைவைப் பேனே,

அவையடக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

ஓதியபன் னூலுணர்ந்தோ ருவகைபொங்கி
மழலையின் சொல் லுவந்துகேட்பா
ராதலினு லென்சொலையும் புன்சொலா
யினுமின்சொ லாமென் றோர்ந்து
கோதகற்றிக் குணம்பொருத்திக் கொள்ளுவர்தன்
னாரெனவுங் குறித்துப் பாணு
சீதமதி சூழ்சிகண்டிச் செவ்வேண்மீமற்
குறவஞ்சி செப்பி னேனே.

தோடையம்.

இராகம் நாட்டை—ஜம்பைதாளம்.

1 தக்கிடதிக்கிடகிட தகுர்தகிமி=தகுர்தவென
மிக்கவடிக்குமயில்=வெற்பில்வருதர்
குக்குடக்கொடிக்குகன்மேற்-குறவஞ்சித்=தமிழ்க்கூறக்
கைக்கயமு=கக்கட=வுலக்கருது=வேனே. ஆ. ஆ. ஆ. ஆ.

2 தண தண-ஜெணு தெஜெணு-தரி தஜெக-தரி தவெனப்
பணவரவின்-மிசைகடஞ்செய்-பச்சைமயி-லோன்-மேற்
குணமுலவு-செந்தமிழாற்-குறவஞ்சித்-தமிழ்க்கூறக்
கணபதியின் னவனுபய-கமலுதிசெய்-வேனே. ஆ. ஆ.

3 அமணர்களைக்கழுமுனையிலறையவரும் இறையவன்மேற்
றமிழிசைக் குறவஞ்சி தழைக்கயான் சாற்றக்
கமுகையொத்த மிடறையுற்ற கன்னிசவந்தரவல்லிதன்
னிமலர்தே னகியசீ ரிதக்துதிசெய் வேனே. ஆ. ஆ.

4 அண்டபகி ரண்டமுக டதிரவடு வதிரவிசை
கொண்டுசிறை புடைத்துதிதங் கூவுசே வலன்மேற்
றண்டமிழிற் குறவஞ்சி சாற்றமலிக் கொழுந்தரனும்
எண்டிசைவணங்குமிடும்பேசுவரனுக்துணையே. ஆ ஆ.

மங்களம்.

இராகம் மதாமக்கிரியை —ஆதிதாளம்.

மங்களமே ஜெய மங்களம் எங்கள்
மாயூரகிரியானுக்கு மங்களம்.

1 துங்கமலி நீதனுக்குச் சொற்றமிழ் வினோதனுக்குச்
செங்கமலப் பாதனுக்கு மங்களம் எங்கள்
சிகண்டிமலி நாதனுக்கு மங்களம்.

2 சத்துருசம் மாரனுக்குச் சங்கரிகு மாரனுக்குச்
சித்திரவிஸ் தாரனுக்கு மங்களம் எங்கள்
சிகண்டிமலி வீரனுக்கு மங்களம்.

3 அன்பர்ப்பா லுரியானுக்கு மசடர்ப்பாற் பரியானுக்குத்
தென்பழனி புரியானுக்கு மங்களம் எங்கள்
சிகண்டிக் கிரியானுக்கு மங்களம்.

(னுக்குச்

4 மருவுமனங்கலியானுக்கு வாய்த்தவெண்ணெய் கலியா
செருவிலென்று மலியானுக்கு மங்களம் எங்கள்
சிகண்டிமலியானுக்கு மங்களம்.

கட்டியக்காரன்வருகிற விருத்தம்.

தகிபனே யுண்டதாமோ தரன்றிரு மருகன் றண்டே
னகிபுடை சூழவாழு நற்சிகண் டிப்பொ ருப்பின்
பதியெனுங் குமரமூர்த்தி பவனியெச் சரிக்கைகூறக்
கதிசபை யதனிற் கட்டியக் காரனுக் தோன்றினனே.

இராகம் சௌராஷ்டிரம்—ரூபக தாளம்.

கண்ணிகள்.

1 மாமன் பூமன் காமனும்
வையகத்தோருந்துதி செய்யச்செங் கோல்பெறும்
மாமன் குமரமூர்த்தி
வாசற்கட்டியக்காரன் றோன்றினனே.

2 திட்டமாமுண் டாசுகட்டிச்
செங்கையிற் பிரம்புங்கொண் டதட்டிக்
கட்டழ குனகெட்டிக்
கட்டியக்காரனுந்தோன்றினனே

3 மத்தகெஜம் போலேகிசி
வக்கணைம் பேச்சுக்கள் பேசி
கைத்தலவேத் திரம்வீசிக்
கட்டியக் காரனுந்தோன்றினனே

4 வட்டப்பொட்டிட் டுக்குறுக்கில்
வரிந்து கச்சையிறுக்கிக்
கட்டியே மீசைமுறுக்கிக்
கட்டியக்காரனுந் தோன்றினனே.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சிறுமதலை யறுவரெனச் சரவணத்தில்
வீசையாடித் திரியுங் காலை
விறலரிசோ தரியசினை வினவவுன்றன்
மதலையென விரும்பிக்கொங்கை
நறவினிய பாலருளி வளர்க்கவருங்
குமரமயி லுகந்து சுற்றித்
துறவரிமை யவர்மனிதர் யாவருஞ்சூ
ழப்பவனி தோன் றினரே.

ஸ்ரீ சிவசுப்ரமண்யக்கடவுளார் மயின்மீதி லேறிப்

பவனிவருகிற தரு

இராகம் உசேனி—சாப்பு தாளம்.

பல்லவி

பவனிவந்தனரே முருகையர்
பவனிவந்தனரே

அநுபல்லவி.

பவனிவந்தன ரவனியுந்தொழ
எவனமங்கையர் நவநடஞ்செய பவனி

சரணங்கள்.

1 செஞ்சொல் வலவரும் விஞ்சையர்களொடு
கஞ்சன்முகிலுமிறைஞ்ச மயிலினில் பவனி

2 தேவரும்புவி யாவருந்தொழ
மரவுறுஞ்சிகி மேவியன்பொடு பவனி

3 பருவமங்கைய ரிருவருஞ்சொன
வுருவெனுங்கதி குருபரன்றிருப் பவனி

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

பிரணவமா கியபொருளே யையன் காதிற்
பேசுமயின் மலிமுருகர் பவனி கண்டு
கிரணதின கரர்கோடி தோற்ற மோவென்
கிளிமொழியார் பலருமயக் குற்று முத்தா
பரணமுலை பிடித்தணிகி லாரோ வென்னப்
பைந்தொடியார் கனத்தனதி ரூப மென்னுங்
கருணைபொழி வதனமோ கினிமிக் கான
காதல்கொடு ஜோதியில கவும் வந்தாளே.

தரு

இராகம் நாதநாமக்கிரியை—ரூபகதாளம்.

குமரகுரு பரன்முருக சரவணேற்பவவென்னுங்
கொண்டாடி யதிகமயல் கொண்டாடிப் பாடி
அமரருல கமருமின்போ லமருவியவிரதி
அதிரூப மோகமா தரசிவந் தாளே.

வேறு தரு

காம்போதி ராகம்—ஆதிதாளம்.

பல்லவி.

அதி ரூப மோகினியும் வந்தாளே
அரிணவயி ரதிமத னடியீணை தொழுதிடும் (அதிரூப)

அநுபல்லவி

கிதியார் பணிகள் பூட்டி
நெற்றியிற்றிலகந்தீட்டி
மதிபோல்முக மக்கண் ணுட்டி
மயின்மலி முருகய்யனுயர்திருகாட்டில்(அதி)

சரணங்கள்.

1 கொந் தார்மலர் குழலிற் சூடிக்
குளிர்கவ ரசமொழு கிய மிருது-மொழியுரைக்
குயில்போலினிய ராகம் கூடி
சந்தத கிதம்பாடிச் சரச மயில் போலாடிக்
கந்தி கண்டங்கண்ணுடி
கவுனென வளருமின் னிருதனகிரீடி (அதிரூப)

2 அன்னம் போலே யிலங்கும் கடையாள்
அழகது பெறுவளீ நிகர்தரு மிருகன
மார்க்குவரிசேர்விழிக்கடையாள்
பின்னுங் குழற்சடையாள்பிடிக்கு ளடங்கு மிடையாள்
வன்னத் தகிலுடையாள்
வடிவுள கதலியின் மலியிருதுடையாள் (அதிரூப)

3 தத்தை போலவு மொழி கொஞ்சி
சவுமிய குணகன் னய மிலகிய மதி யெழில்
சார்த்துதேமல் படர்ந்த கெஞ்சி
சித்தச னுங்கண் டஞ்சித் தினமும் பணியு மஞ்சி
முத்துமோ கனவஞ்சி
முருகய்யர் தஞ்சித மருவமால் மிஞ்சி (அதிரூப)

விருத்தம்.

அந்தா மின்னே நாலோ ஆரண மோ மருங்க
திந்திர தனுவோ புரூர மெனவினை ஞோர் மயங்கச்
சுந்தரச் சிகண்டி காகத் துரைமைய லுறுயின் னுட்குத்
தந்திர முரைக்கும் பிராண சகிவந்து தோன்றினளே.

தரு

இராகம் மத்தியமாவதி—அடதாளம்.

பல்லவி

சகிமாதுவந்தாள் உல்லாச
சகிமாதுவந்தாள்.

அநுபல்லவி.

சகிமாதுவந்தனள் முகில்போலவேவளர்
சிகிகாகமேவிய குகன்வாழும் காட்டில் சகிமாது

சரணங்கள்.

1 மயிலோ விருவிழி அயிலோ மொழிசெழுங்
குயிலோ குழையிரு வெயிலோவென்றிலகிட (சகிமாது)

2 கடித்தே யனுராகம் படித்தே கனங்குழன்
முடித்தே மலர்ச்செண்டுகைப்பிடித்தேமதிதுதற் (சகி)

3 புகழ்சேர் மயூரன் னகமீதின் மேவிய
குகன்வாழும் காட்டில தகரூபமாகிய (சகிமாது)

விருத்தம்.

வந்திடும் சகியை நோக்கி மலர்மடந் தையின் மிக்கான
சுந்தர நிறைந்து வாழுஞ் சுரதவி னோத மாது
கந்தவேள் பவனிகண்டு கனமயல் மிகவுங் கொண்டு
சிந்தையே மயங்கி யிந்தத் தேவரார் சொல்லென் பாளே.

தரு.

இராகம் எதுகுலகாம்போதி—ஆதிதாளம்.

பல்லவி.

இந்தா ஒரு மயின்மிசை வருகிரு—ரிவராரடிமானே.

அநுபல்லவி.

செந்தா மரை மகளுயர் மயின்மலிசீ
சேவல னேயென்று பாவலர் துதிசெய்ய (இந்தா)

சரணங்கள்.

1 கருணை பொழி விழியுங் கண்டேமன
முருகுதே யதிமயல் பெருகுதே
அருகி லுறையுமிரு பருவ மங்கையருடன்
அதிக மதுரவுரை யிதமொடுபேசி (இந்தா)

2 தித்தித் திருக் குமவ ரிதமுண்ண
மெத்தவு மனதாசை முற்று தே
சித்தமிரங்கி யொரு முத்தக் தாரரோ வெனத்
தெகிட்டா மயலென் னெஞ்சிற் புகட்டி யிங்கிதமாக (இ)

3 சந்தன மொடு கந்த மணிக்கதி
விந்தைய தாகவ ணிகந்திடவே
சிந்தையில்த் தயவுபொ ருந்தா ரோகுன்றைத்
தேசிக னெனப்புவி ராசருந் துதிசெய (இந்தா)

விருத்தம்.

அவரவர் மனத பீஷ்டம் அருண்மயி னகத்தி லேவாழ்
பவரவர் பவனி கண்டன் பாகிமோ கித்த மின்னுள்
கவரச வினிய சொற்பிரா னசகியை வினவி வார
கிவரெவ ரெனவுங் கேட்கு மேந்திழைக் கியம்பு வாளே.

குன்றுக்குடிக் குறவஞ்சி.

தரு.

இராகம் தோடி—ரூபகதாளசாப்பு.

பல்லவி.

மானே யறி யாயோ சொல்லு வேனே இனி நானே.

அநுபல்லவி.

தேனே செறி மாகதி சூழ் குன்றைத்
தேசிக னென்றிகத் காசினி போற்றுதல் (மானே)

சரணங்கள்.

1 உருகன் பர்க ளருகின் புறு
முருகன் செந்திரு மருக னென்றுநீ (மானே)

2 வேதன் பணிபாதன் குன்றை
காதன் சிவகுரு நாத னென்றுநீ (மானே)

3 வையக் துதி செய்யுங் கும
ரையன் பன்னிரு கைய னென்றுநீ (மானே)

அறுசீர்க்கழிநேடிலடியாசிரிய விருத்தம்.

சினலிறைக்குந் தாளமொலிர் தண்பணியுந் தேனதியுஞ்
செழிக்க வோங்கிப்
புனலிறைக்கு முகிறவழு மயின்மலிவேளெனச்சியும்
புகன்ற போதே
மினலிடைக்கொம் பனமயங்கி மயன்மீறி யைங்கணையால்
விரைக்து சாடுங்
கனலிறைக்குங் கொடையாகிக்கனலிறைக்குஞ்செழுமதியைக்
கதஞ்செய் வாளே.

தரு.

இராகம் பந்துவராளி—ஆதிதாளம்.

பல்லவி.

மதியாமலே இங்குவந்தாய்—வெண்ணிலாவே வந்து
மதிமோசம் போகாதே—வெண்ணிலாவே.

அநுபல்லவி.

கதிர்வே லணியுஞ்செங்கைக் கடவுள் சித்திண்டிமலைக்
கந்த வேளோனான ணைந்தவேளே யென்செய்வாய் (மதியா)

சரணங்கள்

1 கனலா யென்றனை வந்துசாடுறதுங் குகனைக்
கண்டவு டன்மலைவ யோடுறதும்

புனலா கியவுனக் கென்னவீம் பிதுசும்மா
பூச்சிகாட்டி யாழமு நீச்சுங் காட்டியிப் போது (மதியா)

2 திங்களா யுலகெங்கும் நிறைந்தாயே—யிப்போ
திங்கென்முன்னே ஞாயிறுக வந்தாயே
நங்கையர்க்கு முகமாகப் பொங்கமுற் றிலங்கியநின்
நன்மதி தனைமறந்து துன்மதியா கவிப் போது (மதி)

3 தரணிபன் போலமா தரைக் காய்ந்தாயே—காய்ந்தந்
தாமரைக் களங்கமுற்றுத் தேய்ந்தாயே
சரவணைப் பவர்குன்றை முருகர் கனிவாய் முத்தந்
தந்தணைய வரும்போ தெந்தனை யென்செய் குவாய் (ம)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

அலையிறைக்குங் கடல்சுவற வயில்விடுத்தோன் குன்றைமுரு
கயன்மேல் மாலாய்ச்
சிலையிருக்கும் புருவமின்னுள் செழுமதியைச்சினந்துதென்றற்
றேரைத் தூறிக்
கலைமுனிக்கு மிடமான தாலையென் கனதனத்தைக்
கருகி யுன்றன்
மலையமென்ன வருகிறையோ மலையமன்று போவெனவும்
வகை சொல்வாரே.

தரு.

இராகம் தோடி—ஆதிதாளம்.

பல்லவி.

தென்றலேவந்துசீறுதே=யுன்=சேதிகானறியேனே.

அநுபல்லவி.

கன்று கன்று குன்றை=நாகக்குமரெந்தன்
காதராய்வரி=லேதுசெய்குவாய் (தென்றலே)

சரணங்கள்.

1 அகத்தினிலே டில்லியென்று
மகத்துவம் கொடுவந்தாய் தென்றலே.
தொகுத்துப் புவியோருக்தன்
முகத்தைப் பார்த்துப்பார்த்துத்
தூத்தாவெனனகிதந் துப்பும்பெற்று நாணுத (தென்ற)

2 காலேநீமதத் தாலேயென்முன்
கடுகிவந்துவக்து முடுகாதே
யேலவேயெனதல்சும் கோலவரவுக்குன்னே
இரையாக்கிடுவன்றென்
வரைவாய்க் குடிகொண்ட (தென்ற)

சுற்றிச்சுற்றிவந்து மெத்தச்சினந்து சீறித்
அடிக்காய்மோதுகிறதடிக்காமோ
வெற்றிமயிலிலேறு முத்தையரெனைக்கூடி
மேவும்வேளையில்வந்துலாவி விடாயாற்றுவாய் (தெ)

விருத்தம்.

மாவுடனே பணியாரம் தருகெடுமால் மருகன்மயின்
மலையில் வாழுஞ
சேவலன்மே லாசைகொண்ட மோகினிதென் றலைப்பழித்துத்
தேமா வென்னுங்
காவிலுறுங் குயிலேயங் கமிலான்கின் னத்தொழிலாய்க்
கருதி வந்து
கூவியென்செய் வாய்பெரிய தனம்பொறுத்த வெனையெனவுங்
கூறு வாளே.

தரு

இராகம்:மோகனம்—ஆதிதாளம்.

பல்லவி.

குயிலே உனக்கிந்தக் கொடுமையேது செழுங்—குயிலே.

அநுபல்லவி.

மயிலாகிய குன்றத்தயிலானெனை மரு—வயிலே நீசெய்யும்
பயிலாவதென் செய்யுங் (குயிலே)

சரணங்கள்.

உன்னி யுன்னிக் கூவுங்குயிலே கூவி
யென்னபலனைக் கண்டாய் குயிலே
சின்னமாக்கினவன் றன்னுடமொழி கேட்டுச்
சினந்து கூவுகிறுயுன் கனந்தா னென்னபோ (குயிலே)

கொடியதிடம் வளர்த்த குயிலே—இந்தக்
கொடியபுத்தி கற்றுப் குயிலே
அடியாக நீவந்து பிடிவாதஞ் செய்யாதே
சொன்னேன் சொன்னேன் என்னுடன் பகையாதே (குயிலே)

மாமின் சிகண்டிமலிக் குயிலே—குமர
சாமியிதோ வருகிறார் குயிலே ஸ்ஸ—
தேமாமல ரோடைத்து பூமாரிஜலியின்னற்
சித்தனை வெல்லுமென் சித்தனை கவின்றபோ (குயிலே)

விருத்தம்.

வாலியிலே சூர்தடிந்த சிகண்டிமலைக் குகன்மார்பில் வாழ்க தம்ப
மாலியிலே மார்வைவைத்து மாலியிலே மதியாலே மதிமயங் குங்
காலியிலே யிரதமெனக் கடுகியுற்று வருமதனைக் கடிகை மங்கை
வேலியிலே வேலிவிட்ட வேள்வரிலென் செய்வையென விளம்பு
[வாளே

தரு.

இராகம் சாவேரி—ஆதிதாளம்.

பல்லவி.

மன்மதப்பயலே பெண்வல்லமை அறியாயோ
வன்குகிலே நிற்பாயோ.

அநுபல்லவி.

கன்மைதருஞ்சிகண்டி யின்மயிச்சிவகுரு
காதரெனைச்சேர்ந்தா லேதுசெய்குவாய்போடா (மன்மத)

சரணங்கள்.

விற்கரும் பானதென்றன் சொற்கரும் பைக்கண்டு
மிகவுந் தலைகுனியுமே—யென்றன்
கற்கண்டு ரும்பைக்கண்டின் விற்கண் கருஞ்சுரும்பு
காணுமென் பதைகெஞ்சிற் றேனு தெதிர்வந்தாயே (மன்மத)

குடையாடை மதியென் சடைநாகங் கண்டிடலங்
குறைத்துமலைவா போடுமே
கடுகி வருகின்றவன் படைகளெல்லா மெனது
கணமாம் அல்லாது வேறெகுணமாம் படைகளுண்டோ (மன்மத)

கரும்பலத் தேரேறி பார்ப்பரித் தோடிவக்தென்
கருத்தை யுருக்கி நின்றுயே
பார்ப்போ மினிமேற்குன்றை வேற்பா னிங்கேவரிற்
பஞ்சபாணீயுங் கெஞ்சவல்லவோ வேணும். (மன்மத)

விருத்தம்.

ஞாயிறெனத் திங்களெனச் செவ்வாயம் புதனத்த
னங்கன் றுவத்
தாயவியா முங்கைதொடாள் வெள்ளித்தா லத்தினமு
அபூணன் பெற்ற
தாயுமே சதமெனு [illegible]ளானென்றுகுன்றைச்
சாமி பர[illegible]
றேனெனது நேயமே[illegible]ல்லெனமோ கினிசகிமுன்

தரு.

இராகம் ஆனந்தபைரவி— ஆதிதாளம்.

பல்லவி.

தூதுசென்றிப்போதென் சேதியைச்
சொல்வாயே சொல்லச் செல்வாயே

அநுபல்லவி.

பூதலம்புகழ் காதன் சிகண்டிமலைப்
புண்ணிய ரெனுஞ்சுப்பிர மண்ணியர் சமுகத்தில் (தூது)

சரணங்கள்.

விண்மதி யாலெந்தன் பெண்மதி யானது
மெத்த மயங்குதென் முத்துத் துரையவர்
தண்மதி யானனங் கண்மதி யானனந்
தாலத்திற் பாலொடுவைத் தாலத்திலு ஞ்செல்லேனே (தூது)

பன்னீர் கொதித்திடும் வெந்நீ ராகுதே
பாகிலு யுமின்சொல்லாப் பாகிலு மருந்தேன்
பன்னீர் கங்கொடவள் வெந்நீர் தடவிலப்
பைந்தொடிக்கு மாரனம் பைந்தொடிக லில்லையென்று (தூது)

சங்கம லிகற்முழங்கம லிளாகிவி
தனத்தமுக் தமென்னிரு தனத்தமுக் திச்சேரவே
செங்கம லிவளருக் தங்கம லியருஞ்
செவ்வேளைக் கண்டிவ் வேளை தருணமென்று (தூது)

விருத்தம்.

கதிசுரபிக் குலங்களைத்தின் குவடெடுத்தங் கனத்தடித்துக்
காக்குங் கோவும்
விதிசுரருக் தாதிகுமார்க் கிவையுரைத்தக் தார்கொளார்வை
மின்னே யென்னும்
மதிசுரத மோகினிசொற் படிசகிசென் றனள்பின்மயி
லசலத் தோங்குக்
குதிசுரசங் கிதகடனத் தொருகுமின் வருகிறசுக்
தரஞ்சொல் வேனே.

அகவல்.

சிலையென மேருச் சிலையினை வளைத்துங்
கலையெனப் புலியுரி சுவின்றரப் புனைந்து

வெள்ளியங் கிரிமிசை மேவி யுமையுடன்
உள்ளியங் குவகை யொடிவீற் றிருக்குங்
காலியு னுமைதங் கணவனைப் பணிக்தோர்
பாலக னினிது பாலித் தருகின்
முத்தொழி லியற்று முறையருள் செயுமெனச்
சத்தியிற் பாதிதனையொரு பாகம்
வைத்தொரு பங்கை மகவுரு வாக்கி
விரிய புயபெல விசாகன் குகனெனப்
பேரிவை புனைந்திப் பெரும்புவ னங்கள்
சிருட்டி முதலவாழ் செய்வினை யைந்துக்
தொருட்டி நடாத்தெனத் தென்கயி லாய
சுகத்திடப் பாலோர் கல்லகந் தகிரி
யகத்துறை யென்றே யருளிவா கனமாய்
மயிலொன் றருளவும் வரமிவை பெற்றே
அயிலவ னினிதாங் கமர்ந்துல குய்த்தில்
யோகநிர் வாக வுசிதராய் மன்னுஞ்
சாகத் திவிற் றனியர சாளுஞ்
சூரன் முதலிய அசுரவர் மூவருக்
தீரமாந் தவசு செய்திட வென்றே
காஞ்சி வனத்திற் கனதவம் புரியும்
வாஞ்சையை நோக்கிய வரதி துவெனவு
மாலு மயனு மயிலிடம் வழுத்தச்
சிலமார் குகனைச் சிகண்டியு மிறைஞ்சி
யென்னரும் பதவிக் கிடமுரு வாறு
நின்னருள் யான்பெற நீசெயென் றிரப்ப
கன்றென விரங்கி காதன் கருணையாய்க்
குன்றன புயச்சூர்க் கொற்றவர் தம்மை
வாவழைத் தருகினில் வளர்பத மளித்திட
நிருபரு மகிழ்வி லிலவுறு காலையில்
அண்டவா பரணனவ் வாசரை நோக்கிக்
கொண்டன்மே னியனுங் குலவுமே தாவுஞ்
சேந்தன் வாகனஞ் சேவற் கொடியென
வாந்தகை பெறவென வாசைமீக் கொண்டு
நீருலும் பதவியை நீக்கினு னெனவுஞ்

சூரரும் வெகுளிநெஞ் சுடையரா யுறுகாள்
அரியயன் கயிலைவா முண்ணலே யிறைஞ்சியக்
கிரியினர் குகன்மருங் கெய்திவி சாகன்
தேசிகங் கண்டு தெரிசனை புரிய
வாசலி னவரவர் வாகன நிறுத்திச்
சன்னிதி புகவுஞ் சமயமீ தென்றே
யுன்னியே கபட வுபாயம தாக
அசுரர்கண் மயிலிடத் தன்னமுங் கழுமனும்
புஜபெலம் பேசுதென் புகலச் சிகண்டியுஞ்
சினத்துட னெதிர்த்து செயகரு டனையும்
அனத்தையும் விழுங்கிய தறிந்துவி சாகன்
வெகுண்ட சுரன்றனை மேதினி யதனிற்
றகுமுன் பிறவியாய்த் தானமை யெனவிச்
சாபமீய்ந் தெழின்மயில் தன்னையும் வெகுண்டு
மீபடி மீதி லிலவிய பாண்டி
தேச மதனிலே செழித்தபன் னன்கு
வாசமாந் தலங்களின் வளந்தரும் புத்தூர்
அடுத்த குணதிசை யார்த்தயோ சனையின்
அடுத்தமித் தரசவா ரணியத் துனது
மீதுரா முறைகவோர் வெற்பென வாகுநி
போதியென் றுரைப்பவப் போதினிற் போந்தே
மாதுறத் தோன்றிய மயூரமா மலையான்
பாற்கட லமுதினும் பார்க்கவின் னமுதம்
நீர்க்கமாய் நிறையுக் தேனுறுடையான்
பூந்தடங் குடையும் பூவையர் முகத்தின்
காந்தியை மதியெனக் கமலங்கள் குவிதாக்
கொங்கையை நாணிக் குவிந்து கொழுகுதென்
றங்கதை நகுதல்போ லாம்பலு மலர
அளியெலாம் வனிதைய ரானனங் கனியே
களினமென் றேமன காடிவந் தார்ந்திட
நாசியைச் சம்பக நம்பகை யிதுவென
யோசனை யய்வெருண் டோடியே பூங்கா
வடவியிற் புக்கியம் மலர்மேல் வீழ
மடலுறு மலர்த்தேன் வழிந்தகி னுடனே

பிரசுர னரசங்கள் விசையுடன் குதிகொளத்
தகர்த்திடுங் கனிகளிற் றங்கிய கறவு
மித்தமும் கழனியி னிறைவுறப் பாய்த்து
நித்திலன் கொழிக்கு மேமகன் ஞடன்
நிலவுபன் மணிக னிறைத்திழைத் திடுவா
னுலவுமா டங்களி னெளிபரப் புதலிக்
கதிரோன் கண்டிது மதியோ வெனவும்
மதியோன் கண்டிது கதிரோ வெனவும்
சோபித மான சுவணவெற் போவெனக்
கோபுர முற்றுகழ் குன்றைமா நகரான்
அஷ்டகெஜ மெட்டுகிலி விட்டுவீ றிட்டுவாய்
விட்டல றிடக்குமுறும் வெள்ளவா ரணத்தான்
அணிகழ லடியி ஞனடஞ் சேடன்
மணிமுடி மிசைபுரி மாமயிற் பரியான்
கடப்பந் தார்முலைத் தையலார் மயல்கொளுங்
கடப்பந் தாருங் கமழ்தர வணிக்தோன்
அகமதிற் கனிவுற் றடிதொழு மனத்தார்
செகமயக் கிருளைச் சிறையினு லடித்துக்
கனகுரற் கூவிக் கதிதரு ஞானத்
தினகரன் காட்டிய சேவற்ப தாகையான்
கொண்டலிடி பேறெனக் குமுறியே சதமகன்
அண்டமுஞ் செவிடிட அதிருமும் மூசான்
செஞ்சிற் சடாட்சர நினைத்துசற் றுற்றோழா
வஞ்சரைக் காலர்கை வசஞ்செயா ணியினுன்
தீதுசெய் சமணரைத் தென்மதுரை தன்னிலே
வாதினுல் வென்றருள் மயூரகிரி நாதன்
உரைதரு தமிழ்க்கவிஞ ருக்குருகி வேலினுல்
வரையைத் துளைத்திடு மயூரகிரி நாதன்
படிமீது பொங்கிவரு பாவையுஞ் சுவறவே
வடிவேலி யேவிய மயூரகிரி நாதன்
அழல்விழி தரும்பொறிக ளாறெனப் பொய்கைனின்
மழலைவடி வாகிய மயூரகிரி நாதன்
கலியினுயர் தமிழிலக் கணமுரைக் கவும்விபுயை
மலியமுனி வர்க்கருண் மயூரகிரி நாதன்

மதிபருகி திசைமாறி வரினுமுரை வழுவாத
பதியரிச் சந்திரபூ பதியைகிர் கவஞ்
சேடன்முடி கிடிகென் றுடனெழு திகள்வான
மூடவுமி ரவிமாவு மோடவழி யிலதா
யுறத்தணதா ணத்திமித தர்ச்செணுத செணுதசெணு
தத்திமித்தி திமிதவென கீர்த்தமோடு வெற்றிகொடி
தாவியே வீரமொடி லாவியே செணுலவு
வான்றருக் குலமவைக ளீன்றகற் களிகள்பல
தான்றகர்த் ததனிலிழி தேன்றிரைப் புனல்களென
வுஞ்சொரிய மிஞ்சியே யஞ்சிலர்கள் கெஞ்சவே
தரியலர் மகுடமுடி தவிடுபொடி யாகவே
பரிகடாத் தியசெய பராக்கிரம சாலி
வங்கர் கலிங்கர் தெலுங்கினர் கொங்கணர்
மகதர்கள் சூசுதர்கள் புகழ்தரு செகதல
மன்னிய வசசரு மின்னிய திறைசெய
மரபுரிசை சூழ்குமுந் தாபுரியின் மேவியபிர
தாபமத ருபகிரி தீபமென வேபிரபல
முகுநமசி வாயமுகின் மகவெனவு மேன்மைபெறு
செகதலக ராதிபதி சுருர்தகுண சாலகிரி
மேதினியை யாளிமொரு வேண்முத்து விசையரகு
நாதக்க வரிவல்ல வப்பெரிய வுடையார்வ
ரிகரசு பாகரசு சிகரகு ணகரன்
செங்கோல்பெ றுங்கனக சிம்மாசனாதிபகம்
மங்காம லுயர்முத்து வடிகரா தேந்திரனருள்
போசனென வருமெங்கள் போதத்குரு சாமிமக
ராசனுக் கருள்புரிம பூகிரி நாதன்
கல்வியறி வாகமக் கட்டுரை தானமும்
நல்வகைப் பயனிதம் நாடியமெஞ் ஞானமும்
தன்மமே ஜெபமென்று சார்ந்தசிற் தனையும்
தின்மலர்ப தாம்புய தீனைக்கும்வந் தனையும்
புனிதமுங் கனமும் பொருந்தி யெஞ்ஞான்றும்
நவிதரு திருவண் ணாமலை யாதின
சைவசித் தாந்தமா தவகிரைத் திலகர்
தெய்வசி காமணித் தேசிகர் வரன்முறை

பெற்றமெஞ் ஞானசுப் பிரமணிய ரென்னு
நற்றவ குருவையெந் நாளும் பணிகுவே ர
னங்கயற் கண்ணட் கதிமோக காதவெள்
சங்கர னிதமும் தழைக்குங் கூடலும்
யோகம் பிரியா ருளத்திற் குடிகொளும்
பாகம் பிரியாள் பதிமங்கை பாகரும்
மீனிற் பொலிவிழி மெல்லிய லென்னுக்
தேனிற் பொலிமொழி தேவுக்ர நாதருங்
கால வகிக் கடவுளு மயிலார்
வேலணி யுங்கர வேளுமெந் நாளும்
கம்பிரா னென்னவிக் கானிலங் தொழுவளர்
தென்பிரான் மலையெனத் திகழ்சிவஸ் தலமும்
அவகாமி யந்தினை யகற்றிஞா னந்தருஞ்
சிவகாமி யம்பிகை திருத்தளிம கேசரும்
நயனனு தல்வயி ரவமூர்த் தியுமுயர்
செய்யமிகு புதுவையுஞ் சிவதரும புரியும்
செங்கதிரை நிகர்வேல் சிறக்குங் கரத்தண்ணல்
தங்கமலை யுடனெழில் தூலங்குதே ஞட்சிவாழ்
தலமுடன் சிருலவு சதுர்வேத மங்கையெனு
மிலகுதல முடனே யிசைந்தவெழு தலமுமேன்
மேலுந் தழைத்திடவு மேன்மைபெறு மதிகார
சீலந் தரித்தருள் சிவக்ஞான போதகன்
ஆழிசூ ழுலகின்மீ தார்குன்றை நகரினும்
ஊழிதோறு மழிவிலா தோங்குபுகழ் புண்யகிலை
நிற்கட்டு மென்றே நினைத்தல்செய் தெழில் குல்வ
நற்கட்டுமட முங்கவின் றரப் பிரதிட்டை
செய்சப பதிமுனி மதிக்குமதி யுகியாய்
மெய்வசன விஸ்தார வேலாயு தேந்திரமக
ராசரிஷி தானுமெந் நாளுந் தழைத்தோங்கும்
வாசற்க விஞனென்ன வரிசைபெற் றுயர்மகிமை
நித்தமும் பெறுவாணி தாசனென வருவீர
பத்திரக் கவிஞன் பகர்ந்தகுற வஞ்சியின்
பாமாலை சூடியருள் பாலிக்கு நீதன்
மாமாலை யன்றெழு மயூரகிரி நாதன்

பனுவலைப் பாடிப் பரிவுட னுடிக்
கனமலர் சூடிக் கவிழ்தண் ணுடி
கக்கத் திடுக்கிய கனகுறக் கூடையுஞ்
சிக்கென மருங்கிற் சேர்த்த பட்டாடையும்
கண்டார் சுழலும் வண்டார் குழலும்
கரும்பு குவமுறு கரும்பு குவமுங்
கரியின் மருப்பைப் பெரியபொ ருப்பைக்
கதிர்பொற்கு டத்தை மதன்மகு டத்தைக்
கஞ்சகற் போதை வஞ்சகச் சூதைக்
கைத்தா ளத்தைக் கடிந்திடங் கொண்டு
பணைத்துத் தடித்துப் பருத்துக் கனத்துத்
துணைக்கச் சணைத்துச் சுவர்க்கமெனு காமமனை
யேந்திய தனத்தி லிலங்குமுத் தாரமும்
மாந்தர்கள் தொடரும் வசனவிஸ் தாரமும்
ஆலிலை யெனவும மைந்தவு தாரமுஞ்
சாலவே பவளக் தணிகித ரதாரமும்
அன்னமென் னடையும் அரம்பைநேர் அடையும்
பின்னலார் சடையும் பிறங்குதுகி லுடையுஞ்
செவியினிற் குழையுஞ் செங்கா வலையும்
கவமணி யிழையும் கன்முகக் கலையுஞ்
சங்கிணி கனமுஞ் சரிவகிர் குளமும்
அங்கச னுளமு மாசைகொள் வளமும்
கிதம்பப் பணமுங் கிறைசற் குணமுங்
கதம்ப மணமுங் கனகக்கங் கணமுஞ்
சன்னையும் பயிலுஞ் சாற்றுரைக் குயிலும்
வன்னமெய் மயிலும் மனங்களிப் பொயிலும்
பாடகச் சரணமும் பானுவின் கிரணமும்
ஈடிலர பரணமும் எவர்க்குக் கரணமுங்
கண்டுகுறி விண்டு காமனை வெகுண்டு
பண்டரு மிரண்டு பார்வைவரி வண்டு
காவிற்சி லம்பு கலகல கலெனப்
பாலத் திலகம் பளபள பலெனத்
தங்க வணிகள் தகதக தகெனக்
குங்கும கெக்கங் குமகும குமெனச்

சேகுசெக் தரிசெக தரிசெக தரிபென
லாகுகொண் டேயபி நயத்துட னடித்துச்
செயங்கதிர் குன்றைச் செவ்வேண் மயலால்
மயங்கிய வஞ்சி மனத்துய ராற்ற
வெயின்மலி பொன்னின் மேருவை நிகரும்
மயின்மலி வருகுற வஞ்சிவந் தனளே.

அகவல் முற்றிற்று.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பணங்காட்டி யாடரவக் கொடியவிட
மெனச்சிறிப் படரே கூறிக்
கணங்காட்டிப் பொருசூரை வென்றகுன்றைக்
குகனுட்டிற் கனகக் கொங்கைக்
குணங்காட்டிக் குயில்போலுங் குரல்காட்டிக்
குயினேருங் குழலுங் காட்டி
மணங்காட்டி யிரதிக்கு மணங்காட்டி
குறவஞ்சி வருகின் றாளே.

தரு.

இராகம் கலியாணி—அடதாளசாப்பு

பல்லவி.

வஞ்சிவந்தாள் மலைக்குற வஞ்சிவந்தாள்

அநுபல்லவி.

அஞ்ச னைனத்தினைஞ் செஞ்ச ரணைத்தொழு
மண்டர்க் கருளுஞ்சி கண்டிக் குமரய்யன்
ரஞ்சி தக்கன மிஞ்சு புகழெழில்
காட்டு மேமகன் னுட்டி லேகுற (வஞ்சி)

சரணங்கள்.

நத்து மீனைஞர்கள் நத்து மழகுள்ள
சித்திர முலையும்வி சித்திரமே
கத்தி லயாள கத்தின் மலர்கண்
முடித்தி னிதொடு நடித்து வேடுவர் (வஞ்சி)

கண்ட தரமொடு கண்ட சரமது
கண்ட வர்கள் பிரமை கொண்டிடக்

கொண்டல் நிகரெழில் கொண்மி வளருஞ்சி
கண்டி யுயர்வே தண்ட ணைத்தொழும் (வஞ்சி)

கந்த முலவுசு கந்த வாடைமி
குந்து வீசுமு குந்தனுர்
சந்த தியெனும்வ சந்த னணிமகு
டந்த னைகிகர்கு டக்கு லங்கவும் (வஞ்சி)

வேறு தரு.

இராகம் சாதாரமக்கிரியை —ஆதிதாளம்.

பல்லவி

வஞ்சியும் வந்தனளே—மலைக்குற
வஞ்சியும் வந்தனளே

அநுபல்லவி.

மஞ்சுலவுஞ்சிகண்டி மலைமுருகையனித மிலகிய நாட்டில்(வஞ்சி)

சரணங்கள்.

கொங்கைக் குடங்களைசக்தாட மதவையுண்டு
கொண்டை வரிவண்டுகள் பாட அழகைக்கண்டு
அங்கசன்பணிக்தோட அதிக மயலினைஞர் மதியினில் கீட(வஞ்சி)

அத்தர்கதம்பங்களும்பூசி மின்னுரையெல்லாம்
அம்மேயம்மேயென்றுபேசி
கித்தம்புகழுங்காசினியிலுய ரிவையரி னுமக ராசி (வஞ்சி)

முல்லை முகையைகைவெல்லக் கஞ்சமுறைகான்
முகமேகிமம்போலவுமெல்ல நடைநடக்து
அல்லிகிகருங்கல்ல அளகயின் னர்மனத் துள்ளகுறி சொல்ல(வஞ்)

விருத்தம்.

பெருகுறி வெண்ணெயுண்ட பிரான்றிரு மருகனன்னு
லொருகிர வுஞ்சவெற் பையும் பொடி பமித்தும் வேலான்
முருகுறு கடம்பன் குன்றை முருகய்யன் புகழைப்பாடி
வருகுற வஞ்சிசெவ்வேள் வாசலின் வளஞ்சொல்வானே.

தரு

இராகம் அசாவேரி—அடதாள சாப்பு.

பல்லவி.

வாசலிது வாசலிது வானவர்க்கு மேன்மைதரும் (வாசலிது)

அநுபல்லவி.

தேசுலவுஞ் சிகண்டிமலை செழிக்குஞ் செவ்வேண்முருகர்
நேசமுட னெக்காலும் நிலவுமணி வாசலிது (வாசலிது)

சரணங்கள்.

பிரணவமந் திரப்பயனின் பெருமைதனை நிருமலர்க்குக்
கருணையுட னுரைத்தருளுங் கடவுளுறை வாசலிது (வாசலிது)

முத்தமிழைத் தென்பொதிகை முனிக்குவரும் படியுபதே
சித்தருளுமெங்கள்குரு தேசிகனெக்காலும்வளர். (வாசலிது)

பாண்டவர்கள் பகைதடிக்கு பாரளச் செய்யவருள்
ஆண்டவன்சி கண்டிமலை ஆறுமுகன் வாசலிது (வாசலிது)

விருத்தம்.

மாதிவள மோதிவர மயின்மலிவா முயிற்கான்மேல்
மயல்கொண் மின்னு
லேதிவள மோதியதா ரெனமகிழ்க்து கண்ணுற்றி
யார்நீ பெண்ணே
சோதிவள ராறுமுகத் தோன்றல்புகழ் சொற்றருயே
தலங்கு முன்றன்
சாதிவளம் யாதறிய நீதிவழு வாதபடி.
சாற்றென் றனே.

வசனம்.

அகோவரராய்பெண்ணே நீயானல் மயூகிரிவரசகருடைய பெருமையைக் கூறிவக்தாயே நீயோ தேவரம்பைபோலே யிருக்கிறாய் நீயார் உன்னுடைய சாதியென்ன சன்மார்த்தெரியும்படி சொல்லுவாய் பெண்ணே.

ஆனலென்னுடையசாதிதெரியும்படியாய்ச் சொல்லுகிறேன் கேளடியம்மே

த ந.

இராகம் முகாரி—ஆதிதாளம்.

பல்லவி.

சாதி யெங்கள்குறச் சாதி யேகல்ல சாதிமற்றதை விசாரி.

அநுபல்லவி

பாதிமதிநுதல் மாதொரு பாகன்றன்
பாலதெனுங் குன்றை வேலரைப்போற்றிய (சாதி)

சரணங்கள்.

முறையவர் சாதியைப் பார்த்திடி லவர்
வாணியச் சாதியிற் சேர்க்கையாம்
இறைவர்கள் சாதியைப் பார்க்கிலார்க்குமே
லாதவச் சாதியென் றேற்றுவா ரம்மே (சாதி)

அடவுடன் காராளர் சாதி யஞ்சாலி
அறுத்தறுத் துடன்கட்டுஞ் சாதியாம்
படியிற்கோ வியர்கள் சாதி தான்மெத்தப்
பட்டிக் குலமீகுத்த சாதியாம் அம்மே (சாதி)

தரணியில் வணிகர்தஞ் சாதி யாருக்குத்
தனங்காட்டி விலைபேசுஞ் சாதியாம்
நிரமாக ஆராய்ந்து பார்த்தி டிற்சூத்
நிரச்சாதி கடைப்பட்ட சாதி யாமம்மே (சாதி)

யெந்தன் சாதிக்கிணை யெந்தச் சாதியாகிலு
மீடென்று மீதினை யாதே சிவன்
மைந்தரெ னவேவந்த மாபூரகிரிச்சுப்பிர
மண்ணியர்க் குரிமையுடன் பெண்ணைக் கட்டிக்கொடுக்கும் (சா)

விருத்தம்.

போரினிற் கீதிரொளித்த புசபெலன் மருக னீபத்
தாரினைத் தரித்தோன் குன்றைச் சண்முகக் கடவுள் காட்டிற்
காரிய விதமாய்ச் சாதிக் கனமுரைத் தருளும் வேட
காரியே யுங்கள் சாதி கடத்தையைச் சாற்றுவாயே

வசனம்.

அதோவாராய் குறமகளே உன்னுடைய சாதிவளங்கேட்டு மகாசந்தோஷமாச்சுது உன்சாதியினுடைய கடத்தையைச் சொல்வாய் குறமகளே.

ஆனல்ச்சொல்லுகிறேன் கேளடியம்மே.

தரு

இராகம் காத்தாமக்கிரியை—ஆதிதாளம்

கண்ணிகள்.

சாதிமுறைசொல்லச்சொல் ரூயம்மே-யினிச்
சாற்றுறேன்சாற்றுறேன்கேளடி நீயம்மே (அம்மே)

ஆதியாந்தெய்வக்குறச் சாதியம்மே=வேறே
யார்க்கும்வராதெங்கள் நீதியம்மே (அம்மே)

கூடைதெத்திக்குறம் படித்திடுவோ - மெங்குங்
குடியிருக்கக்குடிசி லடித்திடுவோம் (அம்மே).
சாடையிலேகொன்னிப் பேசிக்கொள்வோம் - மெங்கள்
சாத்திரத்திலர்க்குங்குறி பார்த்துவிள்வோம் (அம்மே)
கறுத்தச்செவத்தவெள்ளைத் தினைவிரைப்போம்=காக்கை
கழுகுதின்னும்வடை யிழுக்குரைப்போம் (அம்மே)
குறத்திபுளிக்குடிக்கக் குறவனையே - மருத்து
குடிக்கச்சொல்வோமடி கொம்பனையே (அம்மே)
பின்னொருசாதியும் பெண்ணெடுக்கோ - மெங்கள்
பெருமையறியாரிடத் தூரைகொடுக்கோம் (அம்மே)
பின்னமெங்கள்முறைசொல்லி முடியாதே - கும
ரேசர்மீதினிற்கொண்ட ஆசைமாதே

விருத்தம்.

ஓருமலைவ மனதிலுறு வசுரனடங் கிச்சூத
வுருவர யோசை
தருமலையும் பலமணியுந் தவழ்பரவை யிடைமுனைக்குஞ்
சரிதை கண்டு
செருமலையுஞ் சிகிகவே ணட்டியன்ச தியுமுசொற்றுப்
நினம்கீ கண்டி
வருமலையின் பெருமையுநின் மலைவளமுங் குறமகிலே
வழுத்து வாயே.

வசனம்.

அகோவராய் குறமகளே உன்னுடைய சாதிகடத்தை கேட்டு மகாசந்தோஷமாச்சுது நீயறிந்தமலையும் அதினுடைய வளங்களையுஞ் சொல்லிக்கொண்டு வருவாய்குறமகளே.

ஆஞல்ச்சொல்லுகிறேன் கேளடியம்மே.

மலை வளப்பம்.

தரு.

இராகம் கேதாரகௌளம் ரூபகதாள சாப்பு.

பல்லவி.

எத்தன்மலைக் கிணைசொல்மலை-எத்தமலை யம்மே

அநுபல்லவி.

மத்திரச டாட்சரசி வாகத்த பரிபூர்ண
சுத்தரச்சி கண்டிமலைச் சுப்பிரமண்ணிய சுவாமிவளர் (எத்த)

சரணங்கள்

தினகரர்ம தியும்வலஞ்செய் கனகமலை யம்மே=ஓரு
தென்னன்செண்டி னுலடிகளச் சிதமுமலை யம்மே
கனகநித ருங்கயிலா யகமலை யம்மே அது.
காரணமாங் கொஞ்சமதிக் காரன்மலை யம்மே=ம்மே (எக்த)

அருணகிரி யெனுகாம கிரணமலை யம்மே-அது
அன்னமறி யாதுமலை வானமலை யம்மே
கருமுகிலா ருங்கடோசகிரிவளங்கே ளம்மே - அது
கலிமுனிக்கம் மணக்கோலங் காட்டுமலை யம்மே யம்மே (எக்த

இங்கிலத்தி லேயுயரும் கன்னிமலை யம்மே அதில்
எங்காளுங் கோளர்குடி யிருக்குமலை யம்மே
வன்னமுள்ள பன்னுதமிழ் வல்லமுனி வாழ்பொதிகை
மால்வரையை யெல்லோரும். கால்வரையென் றுரைப்பாரம்மே(எ

வாலமதி தனைக்குழந்தைக் கோலமதிக் கயந்தனரு
மருப்பைநிக ராகுமென விருப்பமொடு சாடும்
சிலமதி மானினங்கள் சாலமதித் தேரூர்த்து னி
செழுமாஞ்சித் தங்களுட குலமானென நாடும் (எக்தன்)

அகத்துணர்ஞானத் தவர்பவங்க ளகற்றுமலை யம்மே உயர்
அண்டர்முனி வோர்கள்துதி கொண்டமலை யம்மே
அகத்தியர்க்கு மகத்துவமிகும் அரியதமிழ் தெரியச் சொல்லும்
அய்யனெனும் தென்னகிரி அய்யன்முரு கய்யன்வளர் (எக்தன்)

விருத்தம்.

அங்கக னவரைவாட்டி மகரரை யயிலான் மாட்டும்
இங்கிதக் குகன்மாயூரத் தெழின்மலை வளங்கள்கோட்டுக்
கொங்கைநீலவிலக்கேட்டுக் குளிர்ந்தனன் குறவர்வீட்டு
மங்கையே யுந்தனுட்டு வளஞ்சொல்லிக் காட்டுவாயே.

வசனம்.

அகோவராய் குறமகளே உன்னுடைய நாட்டுவளஞ் சொல்
லுவாய் குறமகளே.

தரு,

இராகம் மோகனம் —சாப்புதாளம்.

பல்லவி

எங்கள்கோமகாட்டுவளம்போ - லெங்குங்காணுளும்மே.

அநுபல்லவி.

செங்கமலை மேவிவளர் துங்கமலை வேலருயர் (எங்கள்)

சரணங்கள்.

கோதெனவு மோதுவது மாகருட ஓதியைச்
சூதுபொரு மென்பதுப யோதரமடி யம்மே (எங்கள்)
முண்டகத்தை யண்டியுற்ற வண்டரன்றியேதுட்ட
மிண்டகத்தின் வண்டரில்லை விண்டலத்தினும்அம்மே (எ)
அரும்பொருளைக் கன்னமிட விரும்புவரல் லாலொருவர்
பெரும்பொருளைக் கன்னமிட விரும்புவரில் லியம்மே (எங்)
சேற்றுறுக வலியன்றி வேற்றுருக வலியில்லை
காற்றிசையும் போற்றியதே ஞற்றினெழி லேபுடைசூழ் (எ

விருத்தம்

அமத்தியே வானோஞ்ச லாற்றிடும் பொருப்புத் தம்பாற்
சுமத்திய கையன்குன்றைச் சுப்பிரமண் யேசர்காட்டிற்
சமத்துரைத் தணிநீகண்ட தலமுணர்ந் தலையெல்லாமோ
திமத்தியல் கடையாய்வேடச் சிறுமிகீ யியம்புவாயே

வசனம்.

அகோவாராய் குறமகளே உன்னுடைய நாட்டுவளங்கே ட்டு மகாசந்தோஷமாச்சுது நீயறிந்துவந்த தெய்வஸ்தலங்களை யெல்லாம் சொல்லுவாய் குறமகளே.

ஆனல்ச்சொல்லுகிறேன் கேளடியம்மே

தரு

இராகம் பெலஹரி சூபகசாப்பு தாளம்.

பல்லவி.

அறிந்த தெய்வஸ்தலங்க ளதணிக்கேளடி யம்மே நான் (அறி)

அநுபல்லவி.

சிறந்தபுகழ்சேர்குன்றை செவ்வேள்காட்டம்மேநான் (அறி)

சரணங்கள்.

கனைதருப்பாண்டியிற் கதிக்குங்கூடற்பதியும்
புனிதமுலவுதிருப் புனல்வை குற்றுலமுடன் (அறிந்த)
நீடுபுகழாப்பனூ ரேடகத்திருவெல்வேலி
பாடல்பெறுஞாழீசம்அடாணையடனின்னம் (அறிந்த)

வரங்குன்றருள் திருப் பரங்குன்றமுஞ்சுவிகை
சரங்கொண்டகொன்றைவனத் திரங்கொண்டபுத்தூருடன்
யாணைப்பவமகற்றுங் காணைப்பதியுடனே
கூனற்பிறையார்கொடுங் குன்றம்பூவணமுடன் (அறிந்த)
உத்தரகோசமங்கைத்தலமுமறிவேன்
உத்தரதேசத்திலு முள்ளதலங்களின்யான் (அறிந்த)
குருந்துறையரன்வாசப் பெருந்துறைப்பதியுடன்
திருந்துமாரூர்வேலு தில்லைசி காழியுடன் (அறிந்த)
இன்னதெய்வஸ்தலம னேகமறிவேனம்மே
சொன்னமயூகிரியேன் சொத்தஸ்தலம் அம்மே காண் (அ)

விருத்தம்.

மிஞ்சிய சமரிற்சூரை வென்றவன் மீனகத்தில்
ரஞ்சிதக் குமாரமூர்த்தி நாட்டினிற் குறவர்மாதே
சஞ்சல மின்றித்தெய்வத் தலமுணர்ந் தவெலர்ஞ்சொற்றூய்
வஞ்சியின் றலவிசேட மகிமையை வழுத்துவாயே.

வசனம்.

அகோவராராய்பெண்ணேகுறமகளே. கீயறிந்ததெய்வஸ்த லங்களெல்லாங்கேட்டி மகாசக்தோஷமாச்சுது உன்னுடையதெ ய்வஸ்தலமகிமையை நன்றூய்ச்சொல்வாய்குறமகளே.

ஆனல்ச்சொல்லுகிறேன் கேளடியம்மே.

தரு.

இராகம் அடாணு—தானம் ரூபக சாப்பு.

பல்லவி.

தலமகிமைசொல்லுறேன்கேளடியம்மே

அநுபல்லவி.

கலிமூனியும்பணியவரு கந்தவேளுகந்தகுன்றைத் (தல)

சரணங்கள்.

கட்டரணசூரருட கொட்டமடக்கியகந்த
சஷ்டியனுட்டித்தோரிடர் விட்டகலநீங்கும் (தலமகிமை)
கித்திமொருதரங்கிரியைச் சுற்றிவலஞ்செய்வோர்பவ
மத்தனையுமகற்றிப்பர முத்திவழிகாட்டும் (தலமகிம்ம).
மாரமதிப்பூசத்தில் ரகரவெனுங்காவடிவ
ருறுதும்பரிசுகள்வரும் பகரமும்பொற்சிகரமுஞ்சூழ் (தலமகி)

சித்திரமுடன்மீனமதி உத்திரஉற்சவத்தில்வரும்
பத்தருளத்திருக்குகன சித்துவிளையாடும் (தலமகிமை)
வீரமொடுகார் நிறமயூரமிதமர்ல்வகிர்த
நீரமதிலடியவர் கோரவினைதிரும் (தலமகிமை)
அரவணிப்பெம் மானருளவரவணைத்தம்மையுமுவிரு
சிரவணலித்தருமகிமைச் சரவணப்பொய்கையுஞ்சிறக்த (தல)
காடியக்தத்திர்த்தமதி லாடியவர்கோடிசென்ம
மீடியகன்மும்மலகி யோடிநலஞ்சேரும் (தலமகிமை)
சகலபவமோசன சண்முகநதி வையாபுரியில்
அகமகிழ்க்துமுழ்கினவர்க் கிகபரசாதகமுமெய்தும் (தலமகி)
கனத்தமயில்நகத்திலிருக் தினைத்தையுங்காத்தளிக்குமுரு
கனைத்தொழுதமனத்திலென்றும் நினைத்தவையெலாங்கொடுக்
[கும் (தலமகிமை)

விருத்தம்.

பின்னிய அயிலாற்சூரை வென்றவன் சிகண்டிவெற்பு
மன்னிய தலத்திலுள்ள மகத்துவ முரைத்தாய்கொஞ்சிக்
கொன்னிய மொழிகள்பேசுங் குறவர்தம் மரபிற்றோன்றும்
பன்னிமி யறிந்தவித்தைப் பயனெல்லாமியம்புவாயே.

வசனம்.

அகோவாராய் குறமகளே உன்னுடைய தெய்வஸ்தலவிசே டங்கேட்டு மகாசந்தோஷமாச்சுது நீயறிந்த சாலவித்தைகளைச் சொல்லுவாய் குறமகளே.

தரு

இராகம் மணிரெங்கு—ஆதிதாளம்.

கண்ணிகள்.

சாலவித்தை மெத்தவுண்டு கேளடியம்மே—கல்ல
சாதகவித் தையுமாச வாதமுண்டம்மேயம்மே
மூலிகைத்தொ ழிலிலெனைப் போலேயாரம்மே—அதை
மூதலிக்க வோவினியென் சேதிபாரம்மேயம்மே
கொக்குச்சிறை யிற்குயிலி ருக்கச்செய்கு வேனம்மே
குக்குடமும் வாரணமாகக்கதறுவேன் ஓரு
ஓைக்குளேழு கடலிலிய டக்கச்செய்கு வேன் வெகு

வேங்கையுமிங் கேபணிசெய்து தூங்கிடச்செய்வேன் மத
வேழமுந்தும் பியாகவிக் காளைசெய்குவேனம் மே
பாங்குடனெட் டிவரையுந் தாங்குவேனம் மே அந்தப்
பச்சிலைமூ லிகைவெகு உச்சிதமம் மே யம்மே
ஆனையிட பமேறவு காணைசெய்குவே னம்மே
ஆமையிற்பா லுங்கறக்க லாமேயம்மம்மே யம்மே
வானமதி லேயிமீள காணதிகு வே ளூட்டில்
வஞ்சியர்கி னைத்தகுறி யுஞ்சொலுவேனம்மே
சாந்தமாய்ம முவைக்கையிலேந்து வேனம்மே எனைத்
தப்பியவித்தையு முண்டோ வப்பியம்மே யம்மே
வேந்தர்புகழ் மயின்மலைச் சேர்த்தனுரம்மே யெற்கு
மிஞ்சிப்பசிக்கிது கொஞ்சங்க ஞ்சிவாரம்மே அம்மே

விருத்தம்.

தாதைவாய் புதைத்தமிற்பத் தக்கமந் திரங்கன்னத்தி
லோதையன் குன்றைவேலர்க் குரியகாட் டினிலேவித்தை
யாதையுந் தெரிக்குவேட ராகத்தினிற் றுலங்குந் தெய்வக்
கோதையே யெனதுநெஞ்சக் குறிப்பறிக் துரைசெய்வாயே

வசனம்.

அகோவாராய் குறமகளே நீயறிந்தசித்துவித்தைகளை
யெல்லாங் கேட்டு மகாசக்தோஷமாச்சுது என்மனதிலே நினைத்
திருக்கிற குறியைச் சொல்லுவாய் குறமகளே.

ஆஞல்ச்சொல்லுகிறேன் கேளடியம்மே

தரு.

இராகம் கண்டா—ஆதிதாளம்.

கண்ணிகள்.

சாந்துபன் னீர்கலக்து புலுகு—கொண்டு
தரையிற்ச நிரமாக மெலுகு
வாய்ந்த சித்திரமாய்க் கோலமிலுகு=மரு
மலர்ப்பத்தற் சோடினையாய்க் கொலுகு
செங்கரும் பாலெங்கணு நிரைத்துக்=குளிர்
செவ்வாழைத் தோகைகளை நிறுத்து அம்மே
தொங்கியகுஞ் சம்போலேமாங் கொத்துக்=கொண்டு
தோரணங் கட்டியலங் கரித்து அம்மே

பிள்ளையாரொன் றுமஞ்சலினுலே=நீதான்
பிடித்தமே முகினதின் மேலே
மெள்ளவும்வைத் திடதற்கு மேலே=மலர்
வேண்டுமருச் சனைக்கொருக் காலேஇன்னஞ்
சொல்லுறேன்கே ளம்மேபணி யாரம்=வடை
தோசைமுத லாயபல காரம் அம்மே
வெல்லம்அவற் கடலிசிங் காரம்=அதை
மின்னேகொண்டு வந்திடுப சாரம் அம்மே
பச்சரிசி யிற்கல்லாஞ்சு பார்த்து=குறுணி
பதக்கெள்ளுப் பொரித்தொக்கச் சேர்த்து
இச்சையாய்வெல் லப்பாகத்தில் வார்த்துத்=தேங்கா
யினையுடைத் துத்தோடறப் பேர்த்து அம்மே
பொடிப்பொடி யாய்கறுக்கிக் கெரட்டு=அவற்
பொரியுங்கொண் டுவாரெண்டு தட்டு
வடக்குவாய்ச்செல் லிக்கும்பொங்கலிட்டுக்=குடத்தில்
மதுவும்வைத் துக்குட்டியும் வெட்டி
கிரைகாலி மீதுவிளக்கேற்றிப்=பசுவின்
நெய்யைவிட்டுக் கொண்டுவத்தல் நேத்தி
குறைவில்லா மலேயென்றன் சாத்தி=ரத்தின்
குறியையறி யலாம் பிரார்த்தி
தாம்பூலத்தக்கணைசாம்பிராணி=யொரு
தாம்பூரத் தகடொன்று பாணி
மேம்புலத் துறுமிக்கி ராணி=கூட
மெச்சுமென் குறிதான்வெகு திர்ணி
இத்தனையுங் குறையாமல்ச் செய்யே=உத்தன்
இதையத்தி னிலுறுதி வையே அம்மே
உத்தமியே யுத்தனிரு கையே=மன
துள்ளகுறி யெல்லாஞ்சொல்லு மெய்யே

விருத்தம்.

தடவுட னிருதாவி தனைத்திருக் கரத்தின்மேவும்
நிடவுடன் பிடியாற்றுக்கிச் சிகண்டிசே வலுமாய்க்கொண்ட
கடவுடன் குன்றைவேடக் கன்னிநீ சொன்னதெல்லாம்
அடவுடன் கொணர்ந்தேனெந்தன் அகத்துறுகுறிசொல்வாயே

வசனம்.

அகோவராய் குறமகளே நீ சொன்னபிரகாரமே சகல பதார்த்தமுங் கொண்டுவந்து வைத்திருக்கிறேன் இனிமேலாவது என்மனதிலே நினைத்திருக்கிற குறியைச் சொல்வாய் குறமகளே.

ஆனல்ச்சொல்லுகிறேன் கேளடியம்மே.

அகவல்.



சிவனருள் சுதனே திரிவித மதனே
நவமது ரிதனே கனிபொற் பதனே
திருமரு மகனே திரியம் பகனே
கருமிப முகனே கவரிதன் மகனே
தெருளுரை மனத்தினிற் சிறக்கதர கனே
அருளுரை தேகை யடிவிரா யகனே
அயின்மலி யெனுமுர வசுரர்மேல் விடித்த
மயின்மலி யினவெனும் வானவர் தொழுவுங்
கடாட்சமீய்ந் தன்பர் கனைத்தினம் புரக்குஞ்
சடாட்சரப் பொருளாஞ் சரவணைப் பவனே
ஆரணப் பொருள்விசா லாட்சிபங் கினராங்
காரணப் பொருளெனுங் காசிவிசு வேசனே
சவுந்தர வல்லிகித் தந்தய வெடிமரு
வவுந்தர ணியில்வரு மதுரநா யகனே
சிதரன் சோதரி சிவகாம வல்லிகன்
மாதெரு பாகனென் மலைக்கொழுந் தீசனே
கூளிவே தாளியங் கூர்த்த சூலாயுதக்
காளியெனும் வீரமா காளியங் காளியே
கொட்டமிடு துட்டக் கொடும்பேய்கள் தெண்ட
னிட்டிடு மலர்த்தா ளிடும்பே சுரனே
மாதவ னானருள் மகவெனத் தோன்றும்
ஆதன மழகிய ரெனுமய்ய னுரே
மூக்கியமிகு செஞ்சடா முனியாண்டி யப்பா
உக்கிரமொடு தாணியடி யுறையுங் கறுப்பா
கவரிச கோதரன் கண்மணி யெனவும்
புவிபுகழ் வேந்தப் புலிக்கணப் பய்யா

சந்திவீ ரப்பா சமையக் கறுப்பா
சந்திரா தித்தரே சத்தமா தாக்களே
துர்க்கைசா முண்டி சுதினகாமுண்டி
உக்கிரமா காளி ஓங்கார சத்தி
பொம்மகா தேவி பூமிகா தேவி
கம்மகா தேவி நாடகாதேவி
அஞ்சலை தேவி அனுமந்த ராயா
ரஞ்சிதா கோபி ரணவீர பத்திரா
உங்கடம் பாதம் உளத்தில்கான் மறவேன்
மங்கைதன் குறியை வகுத்துரைப் பீரே.

விருத்தம்.

சொலுக்குறு தியராங்குன்றைச் சுப்பிர மணியர்காட்டிற்
கலுக்குறு வலிக்கையாய்கின் காரியம் செயம்செயம்பார்
சிலுக்குறு மயிற்கூச்சிட்டென்றேகத்தை யெல்லாம்போட்டுக்
குலுக்குறு தெய்வம்வந்துன் குறியெல்லாம் கூறுதம்மே

வசனம்.

ஆனல்ச்சொல்லுறேனடியம்மே.

நீ நினைச்சு வச்சகுறி யெக்குகல்லாய்த் தோணுறு கல்லாய்த் தோணுறு என்குறி முகத்துத்தெய்வமும் கல்லாய்வந்து முன்னிக்குறு உச்சுச்சு உச்சுச்சு அம்மே அம்மே அம்மே கேளுறியம்மே.

தரு.

இராகம் கேதாரகௌளம் — ஆதிதாளம்

கண்ணிகள்.

நீ நினைச்சுவைச்சகுறிதோணுது அம்மே
நேமித்தகாரியமெல்லாக் தாமிதமில்லாதே யிக்கே
கிமிஷத்திலேவரக்காணுது அம்மே
யானிரிச்சொல்லுறேன் கேளடியம்மே உந்தன்
அதிஷ்டமேயதிஷ்டம்பின்னுக்குமுனைப்போலுண்டோ
அவனியின் மாதரிற் செம்மையம்மே
கிச்சுக்கிச்செங்குதபல்லியேது யிதின்
கிழக்கேயிருந்தொருபேய்வழக்குஞ்சொல்லிக்கொண்டிதோ
கிட்டக்கிட்டவருகுதிப்போதுசீச்சி
அச்சமில்லையதிலேமாதே எந்தன்

அரியமனஞ்சோதிக்கவருளுவக்தால்வரட்டும்
அதிஞலென்னபோவென்றெண்ணுதே
செல்லக்கையமையள்பார்க்கநீட்டம்மேயுந்தன்
செங்கையிற்கொண்டவரைபோல்மங்கையிற்கண்டதில்லை
செயஸ்தம்பம் நீயினி நாட்டம்மே அம்மே
வெல்லப் பிள்ளையாரைத்துதி செய்யம்மே நீதான்
விரும்புங்காரியமெல்லாம் வரும்படியானவகை
மீச்சமாய்ச்சொல்லுதேயுந்தன்கையம்மே அம்மே
சங்குசக்கரரேகைதங்கம்மே இது
தனரேகையுடனேவிற் பனரேகைகண்டரேகை
தங்கும்புருடரேகை பொங்கம்மே
இங்குன்கவலையைநீ தீரம்மே நிதம்
எங்கள்குல தெய்வமெனுந்துங்கமலைவேலருளே
இப்போதேயணையவருவாரம்மே
சந்தேகமில்லையினிப்பாரம்மே யெந்தன்
சாத்திரத்தினேதீதியைமாத்திரைப்போதிலறியென்
சந்ததிக்குக்கொஞ்சங்குறிவாரம்மே
மைந்தனுச்சிக்கெண்ணையருள்வாயம்மே கொஞ்சம்
வாய்க்குப்பாதிச்சருகுபாக்குப்புகலிக்காம்பும்
வக்கணையாயெக்கித்நினித்தாயம்மே

வசனம்.

அகோவாராய்அம்மே உன்னுடைய முகக்குறி கைக்குறி மெய்க்குறியும் பார்க்கிற போதேநீநினைச்சகுறி யெக்குத்தானே தோணிப்போச்சுறுநீநினைச்சபடிக்குஉன்னுடையஆசைநாயகரா கிய மயூரகிரிச் சுப்பிரமணியக்கடவுளார் உன்னைக்கட்டியணையவே ண்டிக் கிருபைகூர்ந்து சேபனவார்த்தையும் மணமாலிகையும் இதோவருகுது சுகமேவாழ்ந்து கொண்டிரடியம்மே.

விருத்தம்.

மனதிலிலன் பொடுநினைத்த படிமருவ
மயின்மலிவேள் வருவா ரென்றே
தனதெதடுதெய் வக்குறமின் புகன்றகுறி
கிலவரமாஞ் சாட்சி யாகக்
கனதையுடன் றூதுசென்ற சகிமாதுங்
கடப்பமலர்த் தார்சைக் கொண்டு

வனிதையெனும் அதிரூப மோகினிமுன்
வந்தினிது வழுத்துவாளே.

தரு.

இராகம் ஆனந்தபைரவி—ஆதி தாளம்.

கண்ணிகள்.

மாதேகின் னுரையின்வழி தாதேகி யன்சென்ற
வகைவிபர மியாவையுமு வகையுடன் சொல்லு வேனே
மாதேவ தேவர்மயின் மீதேறிப் பவனிவர
மையல்நீ கொண்டதுவுங் கைவல்லியங் கண்டேனே
சுபசோப னங்கொண்மி வருகேனெனியுமுத்துத்
தரைச்சியென்று சொல்வதற்குக் குறைச்சலுமுண் டாமோ
உபதேச குருவாகித் தாதைதணைப் பணிவித்த
உம்பர்பெரு மான்சன்னிதிச் சம்பிரமங்கள் கேளாய்
சீதரன் போலவளர் சிம்மாசனாதிபதி
தென்குமரி தாபுரி செழிக்கவரு நீதன்
பூதலம் புரக்குமெங்களபோதகுரு சாமியெனும்
பூபதிசெங் கோல்சிதமும் பொங்கமுட னேங்க
ஆதிகொடுங்கிரிமுதல் ஆறுதல முங்கூடல்
அங்கயற் கண்ணிசொக்க லிங்கருடன் வாழும்
ஸுதியம தாகிய விழாபூசைக் கட்டளை
உயர்பிரம னுரும்வள மோங்கிடவெந் நாளும்
சைவசித் தாந்தவே தாகமம்வ ழாதுசிவ
சமயபரி பாலன்குரு பாலகுண சீலன்
தெய்வசிகா மணியென்னுந் திருவண மலையாதீன
தேசிக ருரைக்குமுப தேசவகை யாலும்
பரதேசி முத்திரையு தார்விசா ரணைபெறுசு
பாஷிதசு சீலன்வே லாயுத யோகி
கிரமா யிபற்றுமுய ரதிகார சட்டங்கள்
செயும்படி கடாத்துமுத்தி யோகர்நெறி யாலும்
காலகா லங்களபி ஷேகதை வேத்தியமொடு
கட்டளை வழாதியற்றக் கதிக்குஞ்சன்னி தானம்
மாலயன் முதலினோர் வந்து நிதக்தொழுதேத்த
வரம்வேண்டி வனவருள் மகாசன்னி தானம்
தென்கோடி யாதிபதி தொண்டைமா னர்செயமுச்

சிக்காலக் கட்டளை சிறக்குஞ்சன்னி தானம்
நன்காம தேனுவெனுங் திருப்புனல்வை முதன்மையர்சே
ணுபதிக் குருபணிபிர தாபசன்னி தானம்
கார்த்திகைக்குக் கார்த்திகைபி ரார்த்தனைசெய் வோர்கினைக்
கருத்தின்வழி யருள்புரியுங் கருத்தன்சன்னி தானம் [குங்
மூர்த்திகர மேன்மேலு முக்கியமுட னுண்டாக
முத்தியடி யார்க்கருள்சண் முகவர்சன்னி தானம்
சன்னிதியின் வைபோக மென்னசொல்வேனினிய
தையலே நீயதிஷ்டசாலியடிமானே
கின்னுடைய மனம்போலு மன்னவர்க்கு மிருத்தமன
கேசமும்விசு வாசமும் விலாசமுங்கண்டேனே
கண்டிசமை யம்பார்த்துக் கொண்டி கின்னெழில்சொல்வேன்
கருத்தறிந்து முககோக்கிக் கருணையுட னேரே
வண்டுமது வுண்டுமயல் கொண்டிளருந் தண்கடப்ப
மாலைத்தா ருனைப்போல் மாலியுங்கொண் டாரே

வசனம்.

அகோவாசாய் அதிரூபமோகினிப்பெண்ணே ஸ்ரீ மயூரகிரி வாசகராகிய சரவணேப்பவர்,சண்முகர், கார்த்திகேயர், கங்கை புத்திரரென்னுஞ், சுப்பிரமண்ணியக்கடவுளார் உன்பேரிற் பரி பூர்ணகிர்பையாய் உன்னுடன் கூடிவினையாட வருகிறே மென்று திருவுளம் பற்றியருளிக் கடப்பமாலையுந் தந்தார் வாங்கிவந் தேன் வந்தேன் இந்தா வாங்கிச்சிரசின்பேரில்த் தரித்துக்கொ ள்ளுவாய் பெண்ணே.

மகாபாக்கியம் அப்படியேவாங்கித் தரித்துக்கொள்ளுகிறே னடிசகியே.

விருத்தம்.

இவ்விதஞ் சகியின்கூறி யிப்தனள் கடப்பந்தாரைச்
செவ்விதா மோகினிப்பெண் சிந்தையின் மகிழ்ச்சிபொங்க
வவ்வியே கண்ணிசாத்தி மார்புறப் புல்கிவேட
மைவிழி வஞ்சிக்கான வரிசைகள் செய்கின்றாளே

தரு.

இராகம் பந்துவராளி—அடதாள சாப்பு.

கண்ணிகள்.

தூதுசென்றசகியின்னுள்=வந்து

சுபசோபனவசனஞ்சொன்னாள்
காதினிலவ்வுரைகொண்டுமுன்னாள்-தவங்
கைமேற்பலிதமானதிக்காள்
என்றுமனதிலின்பங்கண்டாள்=சகி
என்னுயிர்த்துணையாமெனவிண்டாள்
மன்றலார்கடப்பந்தார்கைக்கொண்டாள்-சிரம்
வைத்துமகிழ்தனள்மொழிக்கண்டாள்
முத்துவர்ணச்சருகைச்சேலை-ரத்ன
மூக்குத்தியுமோகனமாலை
அஸ்தகடகமுந்தங்கவோலை=முத
லாபரணங்களும்அன்பாலே
திறமுடனேபுனையிற்பேரே=சொல்லச்
செய்தனுப்பினள்கனசீரே
குறமின்னேகினபின்புநேரே=குன்றைக்
குகன்மங்கையைவந்தணைந்தாரே

விருத்தம்.

மைக்கண்மாதரசைக்குன்றை வள்ளல்வந்தணைந்தாரஞ்ஞா
மிக்கமகிட்சியாக விளங்கிய வளஞ்சேர்காட்டிற்
பக்கிகள் பிடிக்குமான பருவலைப் பிரிவுங்கொண்டு
சிக்கென வேட்டையாடச் சிங்கனுந் தோன்றினானே

சிங்கன் வருகிற தரு

இராகம் பந்துவராளி—ரூபகதாளச் சாப்பு.

பல்லவி.

சிங்கன்வந்தானே—கெடிக்குறச்—சிங்கன்வந்தானே

அநுபல்லவி.

சிங்கன்வந்தானே தங்கமலைமேவு
மிங்கிதவேலரிலங்குகாட்டிற்குறச் (சிங்கன்)

சரணங்கள்.

கச்சைதனைக்குறுக்கி னிற்சல்லடத்திறுக்கி
அச்சமறவுறுக்கிமெச்சிமிசைமுறுக்கி (சிங்கன்)
கொண்டைக்கழகாய்க்கெட்டிக் கெண்டையுறுமாற்கட்டிச்
சொண்டுபேசிப்பகட்டிக் கொண்டவையைதட்டிச் (சிங்க

சிக்குவலியடித்துப் பக்கத்திரள்பிடித்தி
டக்கள்ளினைக்குடித்து வக்கணைகள்படித்துச் (சிங்கன்)
சுரருலகமதிக்கும் அரசவனங்கதிக்கும்
உரியகுன்றைப்பதிக்கு மரசைதந்துதிக்குஞ் (சிங்கன்)

விருத்தம்.

சூதித்திடி மன்பர்நெஞ்சிற் றுலங்கிய தீபமாகக்
கதித்திடி மயூவெற்புக் கங்கையன் வளருகாட்டில்
மதித்திடுஞ் சிங்கனுக்கே வற்றெழில் புரிந்துபாடிக்
குதித்துன்னி கடந்தொய்யாரக் குறப்பயல்தோன்றினனே.

இராகம் சௌராஷ்டகம்—ஆதிதாளம்.

கண்ணிகள்.

(1) சிட்டுத்தட்டுச்சேவற்கூடுங் கையிற்கொண்டி
சிக்கெனக்கொக்குப்பிடிக்கமுக்கூடும்
வட்டமிட்டகண்ணிக்காடுங் கொண்டுசிங்கன்
வங்கணக்குறப்பயல் வந்தனனே.

(2) பதுங்குதுங்கிக்கிடந்து மெள்ளவுன்னிப்
பாயும்புலிபோலெட்டிப்பாய்ந்துகடந்து
மதங்கொள் சிங்கனைத்தொடர்ந்து சொற்படிகேள்க்கும்
வங்கணக்குறப்பயல் வந்தனனே

(3) பனுக்கிச்சினுக்கிப்பேசிக் காட்டினிலுள்ள
பக்கிவரவுஞ்சன்னை யொக்கக்கிசி
வனக்கண்ணிவலிவீசி வேட்டைகளாட
வங்கணக்குறப்பயல் வந்தனனே'

(4) தந்தனச்சங்கீதம்பாடி மயின்மலிச்
சண்முகக்கடவுளைக் கொண்டாடி
மந்திரத்திலதிமோடிச் சிங்கனுக்கேற்ற
வங்கணக்குறப்பயல் வந்தனனே

விருத்தம்.

சிதினை மலியாய்ச்செய்து சிறக்குந்தே கினச்சார்வா
சுதினக் குதவுநாணைத் தொடுத்தவன் மதலைகாட்டிற்
சதிமாய்ச்சிங்கள்வார்த்தை தவறிடா தியற்றும்பாங்கன்
விதிமாய் வரவும்வேட்டை மேல்மனம் விரும்பினனே.

தரு.

இராகம் கண்டை—ஆதிதாளம்.

பல்லவி.

பக்கிவருகுதய்யே—கனமோடி—பக்கிவருகுதய்யே.

அநுபல்லவி.

தக்கபுகழ்சேரு மிக்கழகூரகி
ரிக்குமரேசர்த ழைக்கும்மேமகாட்டிற் (பக்கி)

சரணங்கள்.

கொக்குத்திரள்வெகுவாய்த் திரண்டொரு
மிக்கச்சென்றுவிகுவாய்ப் பாய்திதோ
பொக்கனவேகடி வுக்கோட்டைகிழவூ
ருக்குளத்தண்ணீரில் முக்குளித்துக்கன (பக்கி)

காற்றிசையும்ஓடி யிரைதரு
நீர்த்தடங்கள்தேடிப் பாய்தெழில்
ஆத்தங்குடிவயற் சேற்றில் கழுஞ்சம்பா
காற்றினெடுங்கயல் பார்த்தமகிழ்ந்தின்னம் (பக்கி)

மண்டிஓருக்காலே அங்கங்குதி
ரண்டிகடற்போலே சாலிவயல்
அண்டையிலும்உய்யக் கொண்டான்சிறுவயல்
கண்டவயலிலுங் கெண்டைகளைத்தேடி (பக்கி)

கட்டழகன்தொண்டமான் உச்சிக்காலக்
கடடளைக்குத்தினந்தான் அவள்
கிட்டஞ்செய்மஞ்சினிப் பட்டிஅரண்மனைப்
பட்டிவயிலிலுங் கிட்டியிதோவெகு (பக்கி)

வேறு தரு.

இராகம் புன்னகவராளி—ஆதிதாளம்.

பல்லவி.

பக்கிமேயுதய்யே பாரய்யே—மெய்யே—பக்கிமேயுதய்யே

அநுபல்லவி.

தொக்கிலே வேட்டைக்கரிகள்
மொக்கலா மொக்கலாமிதோ (பக்கி)

சரணங்கள்.

நிக்கெங்கும்புகழ்சேர்குன் றைக்குடிக்கோயில்பண்ணைச்
செய்க்குளுல விக்கயற்க ளோக்குதக்கி மொக்கிக்கப் (பக்)
பண்ணுலவியபிச்சைப் பண்ணைவெறியன்வயற்
கண்ணுலாவிய தண்ணிலேதொகை
யெண்ணிலாவகை கின்னமினிலே (பக்கி)
பாங்குலவியசிறு மாங்குடிவயலினி
லோங்கியதன் மீன்களையெல் லாங்கவரு மாங்குருகு (பக்கி)

வேறு தரு.

இராகம் கலியாணி—ஆதிதாளம்.

பல்லவி.

வந்துசேருதய்யே பாவையெல்லாம் வந்துசேருதய்யே.

அநுபல்லவி.

வந்துசேருதய்யே சுந்தரஞ்சேர்துங்க
மாமயூரகிரிச் சாமிநாதர்காட்டிற்
கொந்துகொந்தாகப்ப ரந்தெழுந்துமீனைக்
கொக்குமொக்கிவிக்கிச் செய்க்குள்க்கத்தக்கி(வந்து)

சரணங்கள்.

கார்த்திகைக்கட்டளைச் சாத்தனேந்தலழ
கானயிடையனேந்தல் மீனைமிகவுமேய்ந்து
சாற்றுஞ்சிவரியேந்தல் சிங்கமங்கையவயற்
றழைக்குகெற் குப்பையவயல்விளக்கும்ப ளச்செய்யிலும்(வந்)
ஓங்குபுகழ்கியமம் ஓகத்தாவயலில்விளக்
கும்பளமிருமா கிலம்புகுந்துபல
வான்குடிச்செங்கணி வயலில்த்திருவிளக்கு
மானிய மெனுமிரு மானிலத் தன்னிலும் (வந்து)
இலகும்அரம்பைகள் செலகிரீடைசெய்தற்
கேற்றமதுரகவ தீர்த்தமுஞ்சிறந்த
உலகடியூரணி கலமுங்கண்டுபிள்ளையா
ரூழியேந்தற்பெருச் சாவியேந்தலிலும் (வந்து)
நீடுபுகழ்சேர்குடிக் காடன்வயலில்த்தேவ
னேரியுடன்மணியத் தூர்வயலிலுங்கஞ்சம்
காடுமேரிசுன்ன வோடைகுமிழாங்குண்டை
கத்திக்கத்திப்பற்றிச் சுற்றிக்கத்திக்கெற்றி (வந்து)

ஏருலாவியபி டாரிமேற்தல்விப்பிர
னேரியுடனிடும்ப னேரிகுறும்பன்வயல்
வாரிசேர்வலிய னேரிமீனைக்கண்டு
வாஞ்சை தோஞ்சு சாஞ்சு பாஞ்சு ராஞ்சு மேஞ்சு (வ)
மாபழனஞ்சேர்ந்திட் தாவடியேற்தலும்
வையபரிக்கண்மாய்ச் செய்யவயலினுஞ்
சோபிதமாமது ராபுரிக்கரைத்தென்னந்
தோப்பின் ரூப்பு வாய்ப்பு மூப்பு ரூப்பு ரூப்புள் (வந்து)

மாரணசூரசம் மாரகெம்பீரகு
மாரசாமிவாழ்ம பூகாரகாரட்டிற்
கார்புயல்போல்பக்கி சேரவாடைப்பொடியைக்
காற்றுப்பார்த்துத் தூத்துச் சாத்துக் கேத்த வாத்தும்

வேறு தரு.

இராகம் தோடி ரூபகதாளம் சாப்பு

பல்லவி.

பேசாதய்யே அய்யேபொறுபொறு சற்றே பொறுபொறு
பேசாதய்யே அய்யே பொறுபொறு சற்றே பொறுபொறு

அநுபல்லவி.

தேசுயருஞ் சிகண்டிமலிச் செவ்வேள் தனதுபண்ணைச்
செய்களோரத்தில்வந்து சேருது பக்கி
கேருது மீனை வாருது வேட்டை நேருது பொறு (பேசா)

சரணங்கள்.

கூடியே பக்கிகள்ராகம் பாடிக்கயலைத்தேடி ராடிப்
படிபுகழ்குன்றூர்க் குடிவயலினில்ப்
பக்கிமிக்கப்புக்கிக் கிக்கிக்கிக்கெனப்
பதுங்குது பயம் தொதுங்குது கதுகுதுக்குது மொது மொதுங்குது பொறு(பே)
நாற்றிசையும்புகழ்சேர்குன்றைக் கார்த்திகேயன் பண்ணைச்சாத்தி வயக்கலிற்
கண்டைமீனைக்கண்டு கொண்டுமண்டியண்டிக்
காற்குட் டாக்கி நீக்கிமூக்கிற்றூக்கிகோக்கிக்
களிக்குது தின்று கெளிக்குது ஒன்றுமுளிக்குதுசிலதொளிக்குதுபொறு (பேசா)
எண்டிசையும்பிச்சைப் பண்ணையில்ப் பண்டைய நாள்முதலுண்டானசெங்களும்
பார்த்துப்பதுங்கி ஒட்டைக் காத்தான்வயற்புக்கிப்
பக்குவொக்கும் எக்குவொக்கும் மொக்கச்சிக்கும்.
பாரையே செங்கால்நாரையேருகன்பேரையேயெண்ணிநேரையேபொறு (பேசா)

வேறு தரு,

இராகம் ஸ்ரீவல்யாணி ஆதிதாளம்.

கண்ணிகள்.

பொறுபொறுப்பீ மிகுதியடா வரும் புட்குலத்தைத் தகைமதியடா
முருகர்தாளினைத்துதியடா கண்ணீர் முறையாய்ச்சொல்லுறேன்பதியடா (1)
கதிக்குப் பிச்சைப்பண்ணேக்குரிமையாய்ச்சொக்நாதன்வயக்கலிற்பெருமையாய்
மதிக்குமீனும்பிணைவயலிலே சுப்பிரமண்ணியவயக்கலின்செயலிலே (2)
நாயகர்வயக்கல் கடவிலே செங்கால் நாரைவருமந்தக்கடலிலே
சாயாமல்க்கண்ணியை நாட்டடாசேவல்த் தட்டினிலேகண்ணீரூட்டடா. (3)
மருதாசயகர்திருத்தலாம் அதில்வரிசையாய்க் கண்ணிபரத்தலாம்
குருவினங்களும் வரத்தடா கைகூசாமல்க் கண்ணியைப்பரத்தடா (4)
தியாகராஜவயல்வரப்பிலே பக்கிசேரவருமெத்தபரப்பிலே
வாகுடன்கண்ணிகளுணடா பக்கி வாரதிரட்சையாணடா (5)
சங்கரலிங்க முனீஸ்வர வயல்தன்னில் வரும்பக்கிமீசரம்
அங்கனேகண்ணியைத்திருத்தடா பக்கியவளவும்மக்குருத்தடா (6)
சாமிசபாபதிவயலிலே குன்றைச்சண்முகமூர்த்திதன்செயலிலே
சீமுதமாய்பக்கிவருதடா அழைச்சென்றுபிடிப்பதேலிருதடா (7)
இன்னம்பலவுளசெய்யடா அதற்கேற்ற தோர்கண்ணிகள்வையடா
மன்னியகைவல்லீசடா பக்கிவர வரச்சன்னிதீசடா (8)
ஆவலுடன் கண்ணிநாட்டடா சொல்லும் ஆறெழுத்தைமனஞ்சூட்டடா
சேவலன்பாதத்தைநேரடா இதோசிக்குது பக்கிகள்பாரடா (9)

வேறு தரு.

இராகம் பரசு—ஆதி தாளம்.

பல்லவி.

சிக்கக்கொண்டுதையே பரவையெல்லாஞ்
சிக்கிக்கொண்டுதையே

அநுபல்லவி.

சிக்கிக்கொண்டுதையே சிகண்டிமலிக்குமர
தேசிகனே த்தொழுதுவிசும் வலிக்கண்ணிக்குள் (சிக்கிக்)

சரணங்கள்.

காசினியிற்கொடிய பாசமெனுமுவகை
யாசைவலியிற்சிக்கு மாசர்மனம்போலவும் (சிக்கிக்)
கலிசிறிதுமறியாப் புலவினமாதர்கள்
கலவிமயக்கத்தினிற் குலவிச்சிக்கியதுபோற் (சிக்கிக்)
முருகர்பதத்தினிலன் புருகுமனத்திலின்பம்
பெருகுமனந்தப்பொ ருகிற்சிக்கியதுபோற் (சிக்கிக்)

வேறு தரு.

இராகம் கல்யாணி—சாப்பு தாளம்.

பல்லவி.

தேவிவிட்டுப்போயினுமய்யே பாவையெல்லாம்
தேவிவிட்டுப்போயினுமய்யே

அநுபல்லவி.

தேவிவிட்டுபோயினுமய்யே வாலிபத்திற்சூரைவென்ற
வேலரைத்துதியார்செல்வம்போலவும்பக்கிவர்க்கங்கள் (தே

சரணங்கள்.

காடியேபைத்தமிழ்ப்பொருள்த் தேடியேசிங்காரகவி
பாடியபாவலரைக்கண் டோடியவரதுத்தர்போலும் (தேவி)
மெட்டியவிழிவல்லியாற் கட்டியமாதர்மயக்கை
விட்டுமுனிவோர்வனத்திற் பொட்டனசெல்வனபோலும்
ரஞ்சிதமிற்கிரிவலஞ் செய்வோர்பூர்வசென்மத்தின்
சஞ்சலமும்போனதுபோல்மிஞ்சியபக்கிகளெல்லாம் (தேவி)

விருத்தம்.

தொய்யிலெழுதியகளபச் சுவணமேருச்
சுவர்க்கவிரு மாதருட துணைவன் கூர்வேற்
கையன்மயி னகக்குமரக் கடவுணட்டிற்
கலந்துவபற்களில்லுட்டுங் கண்ணிக் குள்ளே
பய்யவந்து சிக்கிப்பல் பக்கியெல்லாம்
பறந்தோடித் தேலியபின் பரிந்து சிங்கன்
மையல்கொடு செய்யகுறச் சய்யல் பேசும்
வங்கணச்சிங் கியைத்தேடி வழுத்துவாரே.

தரு.

இராகம் புன்னாகவராளி—ஆதிதாளம்.

பல்லவி,

சிங்கியெங்கேகாட்டடய்யே யென்வங்கணச்
சிக்கியெங்கேகாட்டடய்யே

அநுபல்லவி.

சிங்கியெங்கேகாட்டடய்யே யிங்கிதமேகன்னட்டில்த்
துங்கமலிவேலரிரு செங்கழலிணையைப்போற்றும் (சிங்கி)

சரணங்கள்.

(1) முத்தமிட்டுக்கொள்ளுவாளய்யே மருவச்சொல்லி
மெத்தமெத்தத்துள்ளுவாளய்யே
அத்திமத்த கத்தையொத்த சித்திரத்தனத்தையுற்ற(சிங்

(2) மிஞ்சிமிஞ்சிப்பேசுவாளய்யேசரசத்தனிற்
கொஞ்சிக்கொஞ்சியேகுலாளய்யே
வஞ்சகஞ்செய் நெஞ்சவஞ்சி ரஞ்சிதஞ்சேரும்செழுஞ்சொற்

(3) பக்கிபொறிச்சிட்டித்தருவாள் கலவிசெய்ய
அக்கரையாய்க்கிட்டவருவாள் சய்யோகமதில்
சற்கரைக்கி னிக்கமிக்க சொற்குலக்குமுக்கியவற்க(சிங்கி)

(4) கூகிமொழி பேசிகொடிப்பாள் குன்றைக்குமா
தேசிகன்மேற்சிந்துபடிப்பாள் குங்குமகத்தம்
வாசமிக வீசவுமுல் லாசவித மேசெயுமென் (சிங்கி)

விருத்தம்.

விற்புரூ மின்னைநேர்ந்து மெல்லிய நிருவர்தோயு
மற்புயன் சிகண்டிச்சுப்பிர மண்ணியர் வளருநாட்டிற்
கற்புள சிங்கிமீதிற் காதலா கிரிமேற்கொண்ட
அற்புதச் சிங்காசிங்கி க்கடையாளஞ் சாற்றுவாயே.

தரு.

இராகம் காம்போதி—ஆதிதாளம்.

பல்லவி.

வங்கணக்காரியென்சிங்கிக்கடையாளஞ் சற்றே
வழுத்தக்கேளடஅய்யே

அநுபல்லவி.

செங்கமலவளருக் தங்கமலிக்குமா
தேசிகர்கேமகாட்டிலே மேட்டிமையான (வங்கண)

சரணங்கள்.

(1) கச்சிருக்குமுலியி னிச்சிருக்குமடய்யே
காரியக்காரிவகைக் காரியிங்கிதக்காரி
குச்சிருக்குங்குழலில் மொச்சிருக்கும்வண்டருங்
கோலமுமெத்தவுண்டய்யே மெய்யேசொன்னேன் (வங்)

(2) ஆளுக்குத்தெரியாமல் ஊருக்குளிருக்குமோ

பேருக்குத்தெருட்டாதே பாருக்குளவள்வலுப்
பேச்சுக்காரியடையே மெய்யேசொன்னேன் (வஞ்சன)

(3) மெல்லச்சிரிக்கிற்பல்லு முல்லைப்பூப்போலுங்கன
மெட்டுமிரட்டும்விழி மெட்டுஞ்சிக்காரப்பொட்டுஞ்
சொல்லுமலரையை வெல்லும்பேர்களுண்டோ
தோகைமயிலடையே மெய்யேசொன்னேன் (வஞ்சன)

(4) கந்தபரிமளமி குந்தபூகவள்வலுக்
காயக்கமுண்டுமுக மாயக்கனகயத்தென்
சிந்தையருகக்குன்றைக் கக்கர்பதத்துதித்துச்
சிந்துபடிப்பளடையே மெய்யேசொன்னேன் (வஞ்சன)

விருத்தம்.

செங்கதிர்வெண் மதியவனும் புடைசூழ் கின்ற
சிகண்டிமலைக் குருபரதே சிகர்க்கன் பான
சங்கினங்க டவம்பமன கேம காட்டிற்
றழைத்திடுஞ்சிங் கனும்புகன்றபடியே சிங்கிக்
கங்கடையாளங்களெல்லா மறிந்து பாங்கன்
அவனியெல்லாக் தேடியுங்கண் டழைத்து வந்து
சிங்கன்முன்காட் டிடமனது சந்தோ ஷித்துச்
சிங்கியைச்சிக் தித்திவைகள் செப்பு வானே

தரு.

இராகம் புன்னகவராளி சாப்புதாளம்

கண்ணிகள்.

இத்தனை காளாக யெனைத்தனி யாகவைத்
தெங்கே போயிருக்காய் சிங்கி=பாரில்

இப்படித் தானெனைத் தப்பிப் பிரிக்துநீ
யெத்த காலிருக்காய் சிங்கி

கித்திலஞ் செங்கெல்லில் சித்தமும் விஞைன்ற
கேமகாட் டிற்சென்று சிங்கா=மாதர்

கெஞ்சக் குறிசொல்லிச் சஞ்சரித்துக்கன
கிதிபெறப் போனேண்டா சிங்கா

குறியுரைப் பதேதம்ம தெரியென்ன லாமக்திர
கூறையுங் காறையு மேது குறக்

கூடை தத்தியார்க்குங் கொடுத்துக் கஞ்சிவாங்கிக்

அறியாம லேகள்ளு வெறியா யுளராதே காட்
டரிவையர்க் குக்குறி சொன்னேன் எந்தன்
அருமை யறிந்தவர்கள் பெருமை யுடனேதந்த
அரிய கூறைகாரைகாண் சிங்கா
கொண்டைக்கு மேலேயோர் பண்ட மென்னமோபோலே
குறுகுறென்று விழித்துக் கொண்டி அதோ
குக்கி யிருக்குதந்த வக்கணை தனையெக்குக்
கூறடி வங்கணச் சிங்கி
தண்டமிழ் செறிசி கண்டிக்கு கன்மோகனத்
தையலார்க்குக்குறி சொன்னேன் அந்தச்
சந்தத மடவார்கள் தந்தரத்தின மிழைத்த
தமனியக் கொண்டைகாண் சிங்கா
ஐந்தலை நாகமுன் கொத்தள கத்தில்நின்
றுமிவ தென்னடி சிங்கி=சற்றும்
அஞ்சாதே உன்மன தென்செய்வே னென்மன
தஞ்சுதே வஞ்சகச் சிங்கி
சுந்தரன் தென்குளக் தைப் போதகுருசாமி
தூரைமகி முக்குறிசொன்னேன் அவர்
தோகைகல் லார்மகிழ்வாகத் தந்தசடை
காக மிதுவடா சிங்கா
என்னடி புன்னைக்காய் தன்னிலே பித்தாளை
யிட்டணிந்த தென்ன சிங்கி= நமச்
கேற்குமோ கங்குலத்தார்க்கு மிதுவெல்லாம்
ஏச்சென் றறியாயோ சிங்கி
கன்னய மாதவன் வேலாயுதமுனி
நாதன் வாழ்க்கக்குறி சொன்னேன் அந்த
கற்றவன் தந்நிடம் ரத்தின மணிருத்தி
ராக்ஷக் கண்டியடா சிங்கா
கெத்திக்கு மேலொரு துத்திப்பூப் பூத்ததில்
கேரே படர்ந்த தென் சிங்கி=யிந்தச்
சித்திர மான விதத்தை நீயெக்குத்
தெரிய வுரையடி சிங்கி
பத்தியுடன்கூடல் ஸ்தானிகன் விக்கிரம

பைந்தொடி யார்மெச்சித் தந்தரத்தினமணிப்
பைம்பொற் சுட்டி யடா சிங்கா

மோடிய தாகச் செவிக ளிரண்டையு
மூடிக்கிடப்பதென் சிங்கி=இந்த

மூக்கியக் தன்னைநீயெக் குத்தெரியமோ
ழிந்தாலா காதோடி சிங்கி

கூடல் கொடுங்குன்ற ஸ்தானீக னென்குப்பு
தேசிகர்க் குக்குறி சொன்னேன் அப்போ

கொண்டாடி யேகுல சேகர மால்தக்க
கொத்தள ஓலைகாண் சிங்கா

கூரிய மூக்குக் குமிழில்ப் புடலம்பூக்
கொதமிதாமே தூங்குதென சிக்கி=மிக்கத்

கோப்பையு முத்தனின் னுப்பையுங் கண்டு
கொடாதவ ராடி சிங்கி

தாரணி போற்றுங் கொடுங்குன்ற மேவிய
ஸ்தானீகர்க் குக்குறி சொனனேன அவர்

தந்திடு மூக்குத்தித் தொங்கல் விலைமதியாத்
தாள மிதுவடா சிங்கா

கண்டத்தி லேஅல்லித் தண்டைத் தரித்திடக்
காரிய மேதடி சிங்கி=யிக்தக்

காரணத் தையெக்குத் தோரணி யாகக்
கருதுவாய் வங்கணச் சிங்கி

மண்டலம் போற்றும் புதுவை ஸ்தானிகர்க்கு
வாகுட னேகுறி சொன்னேன் அத்த

மன்னவர் தந்திடுசொர்னத்தினுலே
வணைத்த கொடியடா சிங்கா

சாதக மாகவே தூது வளம்பழம்
தன்னையுங் கோர்த்துநீ சிங்கி=அதைத்

தாட்டிக மாக அணிந்திட்ட மேன்மையைச்
சாற்றடி வங்கணச் சிங்கி

நீதர் திருக்கோள காதர்தன் கோயில்ஸ்தா
னீகருக்குங் குறிசொன்னேன் அவர்

நேசத்து டன்தந்த சாதிப் பவளகி

கொங்கைக் குடத்தினிற் சங்கம் பழத்தினைக்
கொத்துக் கொத்தாகவே சிங்கி=மனங்
கூசாமல்க் கோருத் தணிக்திடும் விந்தையைக்
கூறடி வங்கனச் சிங்கி
யென்குல தெய்வமாக் துங்க மலிக்குமை
ரேசர்தங் கோயில்ஸ்தானீகர் மிதம்
எந்த னருமை யறிந்து மகிழ்ந்தவ
ரீய்ந்தமுத் தாரங்காண் சிங்கா
சிற்றிடை யைச்சுற்றி ஓட்டிக் கிடக்கிற
சித்திர மென்னடி சிங்கி=இந்தச்
சேதியை யெக்குத் தெரியும் படிக்குமீ
செப்பவு மாகாதோ சிங்கி
சத்தி யுமைவாழ் சிராசை யின்மேவிய
ஸ்தானீகர்க் குக்குறிசொன்னேன் அவர்
சம்பிர மூடன்ஜெச்சிக் கெம்பீர மாய்த்தந்த
தங்க ஓட்டியாணங்காண் சிங்கா
பய்யப் பயிலுமென் சய்யோக வஞ்சிகின்
பூர முலிமார்பிற் சிங்கி=யேதோ
பச்சுப்பச் சென்று முழிச்சுக் கனமாய்ப்
படர்ந்து கிடக்குதென் சிங்கி
வய்யம் புகழும் பிரமனூர் மேவு
மகாசனங் கட்குமூரவர்க்குங் குறி
வைத்தெதல் லாஞ்சொன்னேன் மெய்த்தவர் தந்திடும்
வச்சிரப் பதைக்கங்காண் சிங்கா
மண்டல மிட்டொரு குண்டலப் பூச்சியை
வக்கணை யாய்க்கையில்ச் சிங்கி=பூணும்
வாறென்ன கூறின்ன வாறென்ன மோகன
வங்கைக் கொங்கணச் சிங்கி
அண்டர் பணியுமங் கைப்பதி ஸ்தானீக
ரானவர்க் குக்குறிசொன்னேன் அவர்
அத்தமி ரைஞ்ஞூறு பெற்றிட வுத்தந்த
அஸ்த கடகங்காண் சிங்கா
மின்னட்டை தன்னை முளங்கைக்கு மேலாக

மேதையென் றெண்ணிய காரிய மார்செய்
விசித்திர மீதடி சிங்கி
சொர்னக்கா ரீசுர தேசிகர்க் கும்வளர்
சுப்பிரமணிய தேசிகர்க்குங் குறி
சொன்னதி னுலவ ரென்னிமெச் சித்தக்த
சொர்னக்கை வந்திகாண் சிங்கா
யெத்தணை யேபலிச் சென்றுந் தனூலிடை
யெல்லா மறைத்ததென் சிங்கி=இதை
எக்குத் தெரியும்ப டிக்குச்சு றுக்கி
லியம்படி வங்கணச் சிங்கி
முத்தய மால்தணை வாலசுப் பிரமண்ணிய
முக்கியனுக் குக்குறிசொன்னேன் அவர்
முப்பது பொன்பெற அப்போதே தந்திடு
முத்து வர்னச்சேலைகாண் சிங்கா
மங்கையே கின்கை விரல்களைச் சுத்தி
வளைத்து கிடப்பதென் சிங்கி=இத்த
மார்க்கத்தையெத்தன்முன் தீர்க்க முடனே
வழுத்தடி வங்கணச் சிங்கி
வெங்கள கப்பியார் சுப்பிர மண்ணிய
வேதனுக்குக் குறிசொன்னேன் அவர்
மெச்சியே தந்திடும் உச்சித மானவி
றற்கணை யாளிகாண் சிங்கா
காலினில் ஊமைச்சிக் கூட்டினைக் கோர்த்துக்
கலகல வென்றணி வானேன் என்ன
காயக்க மோமுகமாயக் கள்ளிசுறுக்
காகச்சொல் வாயடி சிங்கி
ஞாலம் புகழ்காணிக்கன் சோலைமலை
ராசனுக் குக்குறி சொன்னேன் மன
ரம்மிய முடன்குறி செம்மையென் றேயவர்
நல்கு பதசரங்காண் சிங்கா
ஓவிய மானகின் பூவடி மீதில்
ஒலித்துக் கிடப்பதென் சிங்கி=அதை

உள்ளப டிக்குமீ விள்ளுவ தேமெத்த

கோவிலுக் கியோகர் வயிராவி தலத்
தார்க்குக் குறிசொன்னேன் சிங்கா=அவர்
கொண்டாடித் தந்திடுக் தண்டை சிலம்பு
கொலுசுக வீதடா சிங்கா
இத்தப் படிக்குக் குறிசொல்லப் போனநீ
என்னை நினைத்தாயோ சிங்கி=உன்னை
யெண்ணி யெண்ணி மனம் புண்ணுகித் தேடி
யிரங்கித் திரிந்தேனே சிங்கி
அத்தப் படிக்கு நானுந்தனைத் தேடி
அலைந்து திரிந்தேனே சிங்கா=நீ
யறியாம லேகள்ளு வெறியால்த் திரிந்திட்டா
லார்மேல்க் குறையடா சிங்கா
ஆகட்டும் போனது போகட்டு மேலினி
யாகிலு நாமிருவோருங் கூடி
ஆசைக் கலவியல்லாசத்து டன்வீனே
யாட வாலாமோ சிங்கி
தாகத்துடனறு போகத்தி லேமன
தாகத் திரும்பினேன் சிங்கா-யினிச்
சந்தித்த பின்னும் தடங்க லுண்டோகூடித்
தானலு போகிப்போம் சிங்கா
தண்ணமிழ் சிக்காம சன்னத மென்னைத்
தலைசுற்றி யாட்டுதே சிங்கி=இனித்
தாமதசஞ் செய்யாதே காமிநீ யென்மேல்த் | ணி
தயவுசெய் வாயடி சிங்கி
அன்னியம் போலென்னைச் சொன்னது தானென்ன
ஆக்கப் பொருத்தநீ சிங்கா=சற்றே
ஆறப்பொறுக்காதோ மீறக் கிணற்று நீரை
யாறிழுத்துப் பேசுமோ சிங்கா
பள்ளத் தண்ணீரினை வெள்ளங் கொண்டுபோகுதோ
பதருதே யென்றுயே சிங்கி=இந்தப்
பயிலும் ஒயிலும் மொழிக் குயிலு மெத்தப்பகட்டிப்
பசப்பு மெங்கேபடித்தாய் சிங்கி
உள்ளத்தை நான்சொன்னலைக் கள்ளத்தை நீளண்ணி

உலக மதனிலெந் தன்குல முலமுமின
முலைக்குத் தெரியாதோடா சிங்கா
தேசத் துடன்பரி யாசத்தி லேசொல்லும்
நீதியில் லாமலே சிங்கி-வேறே
கிந்தையென் றெண்ணுதே சிந்தையு டன்
நித்தமும் வாழ்வோமே சிங்கி
ஆசைக் கலவியுல் லாசத்து டன்செய்வ கூடி
னன்புடன் கூடியே சிங்கா-குன்றை
ஆறுமு கன்பதங் கூறியே வாழியென்
றுடுவோம் வாருங்காண் சிங்கா

விருத்தம்.

அந்தணர் வேள்விவாழி ஆரண நான்கும்வாழி
தந்திர ஆகமஞ்சொல் சைவமும் வாழிவாழி
சந்திர சூரியரும்வாழி தமிழ்வல்லோர் மிகவும்வாழி
சுந்தரச் சிகண்டிக்கந்த சுவாமிதாள் வாழிதானே

குன்றக்குடி குறவஞ்சி.



பிழைதிருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்.
1	9	தலைமையுயற்ற	தலைமையுற்ற
,,	12	தவறன்றி	தவறின்றி
4	15	பிரதட்சண்ஞ்	பிரதக்ஷணஞ்
5	26	தென்றன	தென்றன்
6	5	குவவன்னனி	குறவன்னனி
,,	13	பரிசலிக்க	பரிசலிக்க
,,	19	குபவஞ்சி	குறவஞ்சி
7	18	மூசல்	முயல்
11	6	கனமதி சாற்றுக்கவி	சுகனமதி
13	13	விரத்சமோ	விரதமோ
14	6	வரைந்தனனும்	மூலதவனைந்தான்
16	29	வாக்கியன்	வாக்யன்
17	11	தமிழகனப் குறவஞ்சி	தமிழ்தன்னப்
7	31	சிகதிண்டி	சிகண்டி
12	16	தலகுயிர்த்தில்	தலகத்தில்
,,	32	குலவும்வேதாவும்	குலவுவேதாவும்
15	7	தத்திமிதிதிமித	தத்திமிதிதிமித
,,	21	யாமிமொரு	யாஞமொரு
,,	24	பனதிபுகழ்	னபதிபுகழ்
,,	26	போதசகுரு	போதகுரு
16	9	நாகரும்	நாதரும்
,,	17	புரியும்	புரியுஞ்
,,	31	கவிஞனென்ன	கவிஞனென
20	22	வரராய்	வாராய்
23	18	எந்தள்	எந்தன்
26	15	அயிலாற்	வயிலாற்
28	12	பாகத்தில்	பாகதில்
,,	18	நாளி	நாழி
,,	28	உத்தமி	உத்தமி
30	21	கேலைமி	கேளமி

கம்	வரி	பிழை	திருத்தம்
	3	வென்றென்	வொன்றெண்
	4	பலல்வி	பல்லவி
	23	கடட்ஃள	கட்டஃள
	15	ரூபகதாளம்	ரூபகதாள
	30	சிக்கி	சிங்கி
	5	காரை	காறை
	12	சந்தத	சந்த
	18	தென்குளம்	தென்குழம்
	13	கொதமீதாடே	கொத்மீதாடே
	,,	சிக்கி	சிங்கி
	34	முளங்கை	முழங்கை
	10	படிகு	படிக்கு
	23	யாளி	யாழி
	24	காமி	காமினி
	3	முரை	முறை